மன்றம்

இரா. நெடுஞ்செழியன் எம்.ஏ.

ர் 2 | மாதமிருமுறை 15-7-53 ★ விலை அணா 4 | இதழ்

அந்த நாள்

ஜூலை 14! உலக வரலாற்றில் உன்னதமான இடத்தைப் பெற்றுள்ள நாள். மறக்க முடியாத சம்பவம், மனித வரலாற்றில் மாபெரும் மாறுதலைச் செய்த சம்பவம் நடந்த நாள்?

1789ம் ஆண்டு அந்த நாளில் பிரெஞ்சு நாட்டில் அடக்கப்பட்டுக் கிடந்த மக்கள் வீறு கொண்டெழுந்தனர், பயங்கரச் சிறையாம் பாஸ்டிலி தகர்க்கப்பட்டது. இதிலிருந்து பிரெஞ்சு புரட்சி வளர்ந்தது.

ஜூலை 14! ஏழை எரிமலையானான், கோழை கொந்தளிக்கும் கடலானான். புகைந்த உள்ளத்தில் புயல் வீசியது, குனிந்த முதுகு நிமிர்ந்தது, கோணல் வாழ்வினர் வெளிக்கிளம்பினர். கண்ணீர் விட்ட கண்களில் கனல் பறந்தது, உலர்ந்த உதடுகள் உரத்துப் பேசின.

வேதனை வெடித்தது, வீழ்ந்தது பாஸ்டிலி!

வீழ்ந்தது கல்லும், மண்ணும் கலந்த பாஸ்டிலி சிறைச்சாலை மட்டுமல்ல, உண்மையில் வீழ்ந்தவை உளுத்துப்போன பழக்க வழக்கங்கள், மூட நம்பிக்கைகள், இவைகள் மக்கள் உள்ளத்தில் கட்டி வைத்திருந்த பயமென்ற சிறைச்சாலை. இந்தச் சிறைச்சாலையில் அடைபட்டுக் கிடந்த மனிதன் விடுதலை பெற்றான். அதைக்கண்டு பாராண்ட மன்னர்கள் திகைத்தனர், பாமண்டலப் பாதுகாவலர்கள் பதைத்தனர்.

அன்று, 1789-ம் ஆண்டு ஜூலை 14-ந்தேதி, பாஸ்டிலி முன் ஒரு பட்டினிப் பட்டாளம் எ..பிய முழக்கம் இன்றும் ஒலித்தபடி இருக்கிற... அவர்கள் கூறிய "சமத்துவம், சகோதரத்துவம், விடுதலை" என்ற குறிக்கோள்கள் இன்னும் மக்கள் கவனத்தில் இருக்கின்றன.

...சிக்கு முன்னைய பிரெஞ்சு வரலாற்றைப் படி...ருக்கு அந்த நிலை நம் நாட்டிலும் நிலவுவ... நன்கு காணலாம். அங்கு இருந்ததைப் ...லே ஆளவந்தார்கள் இங்கும் ஆணவ ஆ... புரிகின்றனர். பசியால் துடிப்போரின் ...க்குரல் அவர்கள் காதில் விழுவதில்லை, பட்டினிச்சாவுகள் அவர்கள் பார்வைக்கு வருவதில்லை. ஏழை புழுப் போலத் துடிக்கி..., ...த்தர்கள் உல்லாசத்துடன் வாழ்கி...ர். அதிகாரத்தைக் காட்டி சிலர் வணங்கின்றனர், ஆகாயத்தைக் காட்டி சிலர் பி...கின்றனர்.

...ருளாதாரத்தில் திராவிடம் அடிமைப்ப...டக்கிறது, சமூகத்தில் பிரிக்கப்பட்...கிறது, அரசியலில் வேறு நாட்டுக்கு ... கிடக்கிறது. பொருளாதாரத்தில ...், சமூகத்தில் சகோதரத்துவம், அர... விடுதலை இவை வேண்டும்.

...இருக்கும் நிலையில், அது ஒரு ஜூலை 14 ... நோக்கி நகர்ந்து கொண்டிருக்கிற... அந்த நாள் நமது நாட்டில் என்... ; ஜூலை 13ந் தேதி வருமோ, ஜூ...ல் வருமோ சொல்ல முடியாது. ஆ... றைக்காவது ஒரு தேதி, அந்தநாள் இ...ான் தீரும்.

மன்றம்
இரா. நெடுஞ்செழியன், எம். ஏ.

15-7-53 புதன்கிழமை

டால்மியாபுர அறப்போர்

டால்மியாபுர அறப்போராட்டப் படைத் தலைவர், ஆட்சியாளர்க்கு அனுப்பி வைத்த இறுதி எச்சரிக்கைக்குப் பதில் ஏதும் வரவில்லை; எனவே அறப்போராட்டம் ஜூலை 15-ம் நாள் என்று போர்ப்பறை கொட்டப் பட்டாகி விட்டது! வீரர்கள் சூழ்கின்றனர்; வேலை துவங்கிவிட்டது!

இறுதி எச்சரிக்கைக்கு ஆளவந்தார்கள் அசையவில்லை; அக்கரை காட்டவில்லை; அலட்சியத்தோடு ஆணவத்தோடு இருக்கின்றனர். நண்பர் கருணாநிதி தலைமையின் கீழ்த் திரண்டெழும் போர்ப்படையைக் குறித்து 'இவர்களால் என்ன செய்துவிட முடியும்' என்ற அலட்சியப் போக்கும், 'இவர்கள் என்ன செய்தால்தான் என்ன; இவர்களைச் சமாளிக்க ஆள் அம்பு அதிகார ஆதிக்கம் எல்லாம் நம்மிடமிருக்கிறதே', என்ற ஆணவ எண்ணமும் ஆளவந்தார்களை ஆட்டிப் படைக்கின்றன. இப்படிப்பட்டோர்க்கு உலக வரலாறு, நல்ல பாடங்கள் பலவற்றைக் கற்பித்து வந்திருக்கிறது; அவைகள் இவர்களுக்குப் போதவில்லை போலும்! எனவேதான் புதியதொரு பாடத்தை நேரிடையாகக் கற்றுக் கொள்ளக் காத்திருக்கின்றனர்!

போராட்ட முறைகளைப் பொதுச் செயலாளர் அறிஞர் அண்ணா அவர்கள் படைத் தலைவர் கருணாநிதியிடம் வகுத்துக் கொடுத்து விட்டார்கள்.

ஜூலை 15 போராட்டத் துவக்கம்!

படைத்தலைவர் கருணாநிதி அவர்கள்தலைமையிலே புறப்படும் படை, புகைவண்டி நிலையத்திலும் பிற இடங்களிலும் காணப்படும் டால்மியாபுரம் என்ற எழுத்துக்களை, எவை எந்த மொழியிலே எழுதப்பட்டிருந்தாலும் சரி, அவை மறையுமாறு கல்லக்குடி என்று நீக் தமிழ் எழுத்துக்களால் தீட்டப்பட்ட காகிதத் துண்டுகளை, அவைகளின் மீது ஒட்டும். அவைகளை அதிகாரிகளோ, சிப்பந்திகளோ, போலீசாரோ அகற்றினால், கிழித்தால், மீண்டும் ஒட்டும். அவர்கள் கிழிக்க கிழிக்க ஒட்டிக் கொண்டே யிருக்கும்! எழுதப்படும் கல்லக்குடி என்ற பெயரை அவர்கள் அழிக்க அழிக்க எழுதிக் கொண்டே யிருக்கும்; கல்லக்குடி என்ற பெயர் நிலைபெறுகிறவரை ஒட்டுதலும் எழுதுதலும் நடைபெற்றுக் கொண்டே இருக்கும்.

ஜூலை 15-ம் நாள் டால்மியாபுர அறப் போராட்டத் துவக்க நாளாக மட்டுமில்லாமல் நேரு சர்க்காரை உணரச்செய்யும் நாளாகவும் ஆக்கப்படும் என்று பொதுச் செயலாளர் தில்லை மாநாட்டிலே அறிவிப்புச் செய்து விட்டார்.

“இரயிலை நிறுத்துவது போன்ற செய்கைகள் முட்டாள்தனமானவை, அவைகள் சிறிதளவு நடைபெறவும் இனி இடங் கொடுக்க மாட்டேன். கடுமையான நடவடிக்கைகள் எடுக்க வேண்டி வரும்” என்று தென்னாட்டில் நடைபெற்ற திருத்தணிப் போராட்டச்செயலை இழித்தும், பழித்தும் கூறிய பண்டித நேருவுக்கு நல்லறிவு புகட்ட வேண்டியும், டால்மியாபுர அறப் போராட்டத் துவக்கத்தை அறிவிக்க வேண்டியும் ஜூலை 15ம் நாள் மட்டும் தென்னாட்டில் எங்கு, எப்பக்கம் செல்லுகிற புகைவண்டியாக இருந்தாலும் அது ஒரிடத்தில் சிறிது நேரமாவது நின்றது என்ற செய்தி பண்டித நேருவுக்கு எட்டும் வகையில் நிறுத்தப்பட வேண்டும் என்று பொதுச் செயலாளர் அறப்போர்க் கட்டளை பிறப்பித்து விட்டார். இந்த அறிவிப்பு அறப்போராட்டத்தை அமைதியான முறையில் இரயில்வேயின் சொத்துக்களுக்கு இம்மியளவு கேடும் ஏற்படாத முறையில் நடத்த வேண்டும் என்று கடுமையான கட்டளையிட்டுள்ளார். போலீசார் அடித்தால் அடி வாங்குவதும், கைது செய்தால் பணிவதும், சிறைக்கு அழைத்தால் செல்லுவதும், யாதொரு எதிர்ப்புமின்றி பொறுப்புணர்ச்சியோடு நடைபெற வேண்டும் என்றும் பணித்துள்ளார். “டால்மியாபுர போராட்ட ஆரம்

பும் இன்று. அதன் அறிகுறியாக-அதனை "நேரு அறிவதற்காக, இந்த இரயில் நிறுத்தப் போராட்டம்" என்று போராட்டத்தில் ஈடு பட்டோர் அமைதியாகக் கூறவேண்டும் என்றும் பொதுச்செயலாளர் நெறி காட்டியுள்ளார்.

அமைதியின் அடிப்படையில், அறிவின் துணைகொண்டு, நேரிய வழியில் கண்ணியத்தோடு செல்லுகிறது கழகம். அடக்குமுறை ஆணவ ஆதிக்க ஆட்சி என்னென்ன பரிசுகளைத் தருமோ, தெரியவில்லை'

வெற்றிபெரும் நோக்கோடு வீரர்கள் களத்தில் இறங்கிவிட்டார்கள் என்பதை அறிய பெரிதும் மகிழ்கிறோம்.

டால்மியாபுர போராட்டத்தைப் பற்றிக் கேலி பேசுவோர், வசைமாரிபொழிவோர் ஆகியோரின் இழிசொற்களைப் பொருட்படுத்த வேண்டியதில்லை என்று அறிஞர் அண்ணா கழகத் தோழர்களுக்கு ஊக்கம் கொடுத்துள்ளார்.

கழகம் ஏற்பட்டு, பல போராட்டங்களில் கலந்து கொண்டிருக்கிறது. ஒவ்வொரு போராட்டம் நிகழும்போதும், பொறுமைக்காரர்களும், அரசியல் அனுதைகளும் கழகம் அழிந்து விடும் என்றுதான் ஆருடம் கூறி வந்தனர். கழகம் அழியவில்லை; மாறாக வளர்ந்து வருகிறது. ஆனால் ஆருடம் கூறியோர் மனமழிந்து வருகின்றனர்.

டால்மியாபுரப் போராட்டம் வடநாட்டு ஆதிக்கத்தையும், சுரண்டலையும், வடநாடு நிலைநாட்டும் அவமானச் சின்னத்தையும் எதிர்க்கிறோம் என்பதன் அறிகுறியாக நடத்தப்படுவதாகும். இந்த அறிகுறிப் போராட்டத்தால் எதிர்பார்க்கும் விளைவு திராவிட மக்களின் குறிக்கோளை வடநாட்டாரும் மத்திய அரசியலாரும் உணர்வர்; திராவிடத்தை பிரித்துக் கொடுத்துவிட வேண்டிய தன் அவசியத்தைச் சிறிது உணரத் தலைப்படுவர்; திராவிடப் பெருங்குடி மக்கள் ஊக்கங் கொண்டு, திரண்டெழும்படிச்சிறிது உணர்ச்சியூட்டும்; கழகம் தன் இலட்சியப் பாதையில் சிறிது விரைந்து முன்னேறும்; பொதுமக்களை பிரிவினை அவசியத்தின் அருகே அழைத்து நிறுத்த சிறிது பயன்படும் ஆகிய இவைகளே யாகும்.

டால்மியாபுரப் போராட்டம் திராவிட முன்னேற்றக் கழகம் கொண்டிருக்கிற குறிக்கோளுக்கு ஆக்கந் தருகிற அருமையான திட்டமாகும். இந்த உண்மையை அறிந்து கொள்ளமாட்டாத 'அரசியல் தரகர்'களும், 'அரசியல் வியாபாரி'களும் டால்மியாபுரப் போராட்டம் பஞ்சப்-பசி-பட்டினியைத் தீர்க்குமா? என்று ஓயாது கேட்டு வருகின்றனர். அறிவுடைமை ஆகாது என்பதால், அப்படிக் கேட்பவர்களை நாம் அவ்வப்போது, அடிக்கடி திருப்பிக் கேட்டுக் கொண்டிருப்பதில்லை, திருப்பிக் கேட்பதென்றால் எவ்வளவு நேரம் பிடிக்கும்?

ரஷ்யா போய்விட்டு வந்து விட்டால் பஞ்சம பசி பட்டினி தீருமா? அதுபற்றி ஊர் ஊராக விளக்கம் செய்துவிட்டால் பஞ்சம் பசி பட்டினி தீருமா? பத்திரிகையில் கார்ட்டூன் போட்டு விட்டால் பஞ்சம் பசி பட்டினி தீருமா? நாளுக்கொரு கட்சி மாறி வேளைக்கொரு பேச்சு பேசிவிட்டால் பஞ்சம் பசி பட்டினி தீருமா? மக்களுக்கு 'ராசி பலன்' சொல்லிக் கொடுப்பதால் பஞ்சம் பசி பட்டினி தீருமா? இப்படிக் கேட்டுக்கொண்டு போக எவ்வளவு நேரம் பிடிக்கும்?

கொள்கை அடிப்படையை மறுப்பவர்கள், அதன் மீது கட்டப்படும் எந்தப் பிரச்சினையையும் மறுக்கத்தான் செய்வார்கள். எனவே தான் அறிஞர் அண்ணா அவர்கள் கூறினார்கள், பொறுமைக்காரரின் - புல்லறிவு படைத்தோரின் ஏசல்களைப் பொருட்படுத்தப் போவதில்லை என்று.

வடநாட்டு முதலாளித்துவத்தின் கோட்டையாக, வடநாட்டுச் சுரண்டலின் முதலிடமாக, திராவிடத்தின் அவமானச் சின்னமாக விளங்கும் டால்மியாபுரம் நோக்கி படை புறப்பட்டு விட்டது. கழகத்தின் முன்னணிச் செல்வர் கருணாநிதி, கழகக் கொடி தாங்கி முன்னே செல்கிறார். களம் வந்து விட்டது. நாள் நெருங்கி விட்டது. போராட்டத்தில் புகுந்துள்ள வீரர்கள் வெற்றியுடன் மீள்வார்கள் என்ற முழு நம்பிக்கையுடன் வாழ்த்துகிறோம்.

மமதை அழிக்க மறியல்

ஆச்சாரியாரின் ஆணவ - ஆதிக்க - பிடிவாத - பிற்போக்கு - வர்ணாஸ்ரம - பாழ்படுத்தும் புதிய ஆரம்பக் கல்வித் திட்டத்தை எதிர்த்து, திராவிட முன்னேற்றக் கழகம் வேறொரு முனையில் போராட்டம் தொடங்கியிருக்கிறது.

அஞ்சா நெஞ்சமும், போர்ப் படையை நடத்திச் செல்லும் ஆற்றலும் படைத்த, கழக முன்னணிச் செயல் வீரர் தோழர் ஈ. வெ. கி. சம்பத் அவர்கள் தலைமையில் படை திரண்டு போகிறது என்றால், அந்தப் படையேற்கும் கஷ்ட நஷ்டங்களைப் போக்கி அதற்குத்துணை புரிய திக்கெட்டிலும் தீரர்கள் திரண்டு வருவார்கள்— திரண்டு வரவேண்டும் என்று வெற்றிக்களிப்போடு கூறி மகிழ்வு கொள்கிறோம்.

எவர் சொல்கிற அறிவுரையையும் ஏற்க மாட்டார், யார் சொல்வதையும் கேட்க மாட்டார், யார் கெஞ்சுவதையும் பொருட் படுத்த மாட்டார் என்ற ஆணவப் போக்கிலே ஆச்சாரியார் தம் அடக்குமுறைத் தர்பாரை நடத்தி வருகிறார்,

ஜனநாயகப் பண்பை மறந்து - மறுத்துத் தம் பிடிவாதத்தின் படியே நடந்து தீருவேன் என்று மமதை மொழி பகர்ந்து செயலாற்றி வரும் ஆச்சாரியாரின், மமதையை அடக்கி ஒடுக்க அதே அளவு பிடிவாதத்தை எதிர்ப்புறத்திலிருந்து கொடுக்கவேண்டிய அவசியம் ஏற்பட்டுவிட்டது. இரும்பை இரும்பைக் கொண்டு அறுப்பதைப் போல, வைரத்தை வைரம் கொண்டு தீட்டுவதைப் போல, முள்ளை முள் கொண்டு எடுப்பதைப் போல, ஆச்சாரியாரின் பிடிவாதத்தைப் பிடிவாதம் என்ற முறையால்தான் அகற்ற வேண்டியிருக்கிறது. ஆகவேதான் மறியல் தேவைப்பட்டது.

ஒருவரைப் பிடிவாதப்படுத்தி இணங்க வைக்கும் மறியல் முறையில் கழகத்துக்கு இயல்பாகவே விருப்பம் இருந்தது கிடையாது. ஆனால் மறியல் செய்ய வேண்டிய நிலைக்கு ஆச்சாரியாருடைய பிடிவாதப் போக்கும்—நடவடிக்கையும் கொண்டுவந்து விட்டு விட்டன. கழகம் தன்னுடைய கொள்கைகளைப் புகுத்துவதற்காகத் தானே முயற்சி எடுத்து மற்றவர் மேல் பிடிவாதமாகத் திணிக்கும் முறையிலா, மறியல் போராட்டத்தை மேற்கொண்டிருக்கிறது என்றால் இல்லை! இல்லவே இல்லை! பிடிவாதம் என்பது ஆச்சாரியாரிடத்திலிருந்து உருவாகி, அவர் முயற்சியாளராக இருக்க, அது நம்மையெல்லாம் தாக்குவதால்தான், பிடிவாதத்திற்கு ஏற்ற எதிர்ப்பு முனையாகிய மறியலை மேற்கொள்ள வேண்டிவந்தது. ஆச்சாரியாரின் ஆணவம் ஒடுங்குகிற வரையில் மறியலை வெற்றிகரமாக நடத்திச் செல்ல வேண்டியது பெற்றோர்கள்; ஆசிரியர்கள், மாணவர்கள், அரசியல் வாதிகள், பொதுமக்கள் ஆகிய எல்லோருடைய கடமையுமாகும். எனவே திரண்டு வாரீர்! வெற்றி வாகை சூடுவீர்!

மூதறிஞர் முத்தையா

——o◯o——

ஆளுந்திறனும், வாதிடும் வல்லமையும், நீதிக்கு உழைக்கும் நேர்மையும், பொது நலத்தொண்டு புரியும் ஆர்வமும், அண்டினோரைக் காக்கும் அன்புள்ளமும், பழகுவதற்கேற்ற பண்பும், மக்கள் போற்றும் மாட்சியும், பெருந்தன்மையும், புகழும் ஒருங்கே பெற்றுக் காட்சி அளித்து வந்த முன்னாள் அமைச்சர் மூதறிஞர் எஸ். முத்தையா அவர்கள் இயற்கை எய்தினார்கள் என்ற செய்தி பெருத்த துக்கத்தையும், துயரத்தையும் நமக்கு அளிக்கிறது.

வீழ்ச்சியுற்ற திராவிடப் பெருங்குடி மக்களை எழுச்சியுறச் செய்ய, பல எதிர்ப்புகளுக்கிடையே, மிக்கத்துணிச்சலுடன் வகுப்புவாரி பிரதிநித்வ உரிமைச் சட்டத்தை நிலைநாட்டி, வெற்றிகண்ட பெருமை முழுவதும் மூதறிஞர் முத்தையா அவர்களையே சாரும். அவரால் கொண்டு வரப்பட்ட சட்டம் சிறிதளவாவது கையாளப்பட்ட காரணத்தால்தான், வீழ்ந்து பட்ட 'தாழ்ந்த' வகுப்பு மக்களினம், சொற்ப அளவாவது தலை நிமிர்ந்து நிற்க முடிந்தது. இந்த வகையில் அவரது புகழ் என்றும் மங்காது.

அவர் தமது இறுதிக் காலங்களில் திராவிட நாட்டுப் பிரிவினையின் இன்றியமையாமையை உணர்ந்து, அந்தக் குறிக்கோளை ஈடேற்றுவதற்கான வழிவகைகள்பற்றி அவ்வப்போது அறிவுரை கூறிவந்தார். அவரது மறைவால், திராவிடர் இயக்கம் ஒரு நல்ல நண்பரை இழந்தது; திராவிடர் சமுதாயம் ஒரு வழிகாட்டியை இழந்தது; அரசியல் உலகம் ஒரு பெருந்தகையாளரை இழந்தது! அவரது பிரிவாற்றமல் வருந்தும் அவரது குடும்பத்தினர்க்கு நமது ஆழ்ந்த பரிவு தேறுதல் அளிப்பதாக! வாழ்க மூதறிஞர் முத்தையாவின் பெயரும், புகழும்!

தாய்மையும், குழந்தை நலப்பாதுகாப்பும்

ஒவ்வொரு தாயும் அறிந்து கொள்ள வேண்டிய சில உண்மைகள்

6

குழந்தையின் உணவு:—

குழந்தைக்குச் சிறந்த உணவு தாய்ப்பால். ஏனெனில்,

(1) குழந்தையின் ஒழுங்கான வளர்ச்சிக்குத் தேவையான சத்துப் பொருள் யாவும் தாய்ப் பாலிலே அமையப் பெற்றிருப்பதோடு, தாய்ப்பால் வியாதிக் கிருமிகள் இல்லாமல் சுத்தமாக இருக்கின்றது. (2) மலிவாகவும் கிடைக்கின்றது! (3) எளிதில் குழந்தையால் ஜீரணிக்கப்படுகின்றது. (4) நோய் வராமல் தடுப்பதோடு, குழந்தைக்கு நல்ல உறுதியுள்ள பற்களும் எலும்புகளும் ஏற்பட உதவி செய்கின்றது. (5) குழந்தைக்குத் தாய் அடிக்கடி பால் கொடுப்பதால் தாய்க்கும் குழந்தைக்கும் இடையே அன்பும், பற்றும் அதிகமாக வளர்கின்றன. அவற்றால் குழந்தையை அவள் நன்றாக கவனித்து, நோய் நொடி இல்லாமல் வளர்க்க வசதி ஏற்படுகின்றது. (6) மேலும் குழந்தை பிறந்த முதல் வாரத்தில் தாயிடத்தில் பால் குடிப்பதால் "கர்ப்பப் பை" சீக்கிரம் சுருங்கி பழைய நிலை ஏற்படுகின்றது. குழந்தைக்கும் மலம் சரிவரக் கழிகின்றது.

புட்டிப்பால் கொடுக்கப்படும் குழந்தைகளிடம் வியாதிகள் மலிந்திருப்பதால் அவைகள் வளமுடனும், பொலிவுடனும், மகிழ்ச்சியுடனும் வளராமல், பலவித வயிற்றுக் கோளாறுகளுக்கு இலக்காகி (?), கன்னங்கள் சுருங்கி உடல், கைகால்கள் மெலிந்து வயிறு பெருத்துக் காணப்படுகின்றன.

வயிற்றுப் பிழைப்புக்காக வெளியில் வேலை செய்யும் சில தாய்மார்களும், சமூக சேவையில் ஈடுபட்டிருக்கும் சில தாய்மார்களும் மற்றும் சில நாகரிகப் பெண்மணிகளும், குழந்தைக்கு ஒழுங்காகத் தாய்ப்பால் கொடுக்க முடிவதில்லை. இவர்கள் அவசியம் அவரவர்கள் டாக்டர்களைக் கலந்தாலோசித்து குழந்தைகளுக்குத் தகுந்த "பால் மாவை" தேர்ந்தெடுத்துத் தகுந்த அளவில் கொடுக்க வேண்டும். குழந்தைக்குப் பால் கொடுப்பதால் தங்கள் இளமைத் தோற்றமும், அழகும் பாழ்படும் என்று தவறாகக் கருதும் பெண்களும் அவர்களுக்கு அந்த எண்ணத்தை வளரச் செய்யும் ஆடவர்களும் இருக்கிறார்கள். இவர்கள் இனியாவது திருந்துவார்களாக!

7

தாய்க்குப் பால் குறையாமல் தேவையான அளவில் இருக்கத் தாய் கையாள வேண்டிய முறைகள்:—

(a) கர்ப்பிணியாக இருக்கும்போது, ஒவ்வொரு பெண்ணும் தினமும் குறைந்த பட்சம் நான்கு டம்ளர் பால், ஒரு முட்டை, ஒரு ஆரஞ்சுப்பழம், நிறைய காய்கறிகள் கீரை வகைகள் முதலியனவும், வாரமொரு முறை மீனும், ஈரல் சத்தும் (Liver Soup) சாதாரணமாக உட்கொள்ளும் ஆகாரத்தோடு கூட சாப்பிட வேண்டும். இங்ஙனம் சத்துள்ள ஆகாரம் சாப்பிட்டுக் கொண்டிருந்தால்தான் குழந்தை பிறந்த பிறகு தாய்ப்பால் குறையாமல் பெருகும். மேலும், கவலைகள், பயம், சண்டை, முதலியவற்றைத் தவிர்த்து, மகிழ்ச்சியுடன் இருக்க வேண்டும். திறந்த வெளியில் தேகாப்பியாசம் செய்ய வேண்டும். மனச்சோர்வுக்கும் உடல் சோர்வுக்கும் இடந் தரக் கூடாது மன நிம்மதியுடன் அதிக நேரம் தூங்க வேண்டும். கர்ப்பிணியாக இருக்கும்போது சுத்தமான ஆடைகளை அணிந்து, முலைக்காம்புகளில் புண்ணும் வெடிப்பும் ஏற்படாமல் பாதுகாக்க வேண்டும்.

(b) குழந்தை பிறந்த பிறகும் தாய் மேலே சொன்னபடி சத்துள்ள உணவும் நிறைய பசும் பாலும் உட்கொள்ள வேண்டும். குழந்தைக்கு ஒவ்வொரு முறையும் பால் கொடுப்பதற்கு முன்னால் தாய் ஒரு டம்ளர் தண்ணீர் குடிக்க வேண்டும். "ஓவல்டின்" "ஹார்லிக்ஸ்" பழ தினுசுகள் போன்ற சத்துள்ள ஆகார வகைகளும் தாய்க்குச் சோர்வை நீக்குகின்றன. மேலும் ஒவ்வொரு முறையும் குழந்தைக்குப் பால் கொடுக்கும்போது, குழந்தை தாயின் இரண்டு முலைகளிலும் உள்ள பால் முழுவதையும் குடித்தால்தான் அடுத்த முறைக்கு அதிகப் பால் ஏற்படுகின்றது. இது முக்கியம். இவ்வளவு முறைகளைக் கையாண்டும் தாய்ப்பால் குறைவாக உள்ளவர்கள் அவரவர் டாக்டர்களைக் கலந்து கொண்டு, தகுந்த சிகிச்சை பெற வேண்டும். ரத்தமின்மை, இருமல், ஜுரம் போன்ற நோய்களை யுடைய தாய்களுக்குப் பால் குறைவாக இருக்கும்.

★ வாழ்க வால்டேர் ★

"வாழ்க வால்டேர்!" இந்தப் பேரொலி, 1789ம் ஆண்டு ஜூலை 14ந் தேதி பாஸ்டிலியை நோக்கிச் சென்ற பிரெஞ்சு மக்களால் எழுப்பப்பட்டது.

அதிகாரம் செய்த அநீதிகளுக்கும், கோமான்கள் மக்களுக்குச் செய்த கொடுமைகளுக்கும் விளக்கமாக இருந்தது பாஸ்டிலி. அநீதியையும், கொடுமையையும் அழித்தொழிக்கப் பாரிஸ் நகரம் புரட்சிக்கோலம் பூண்ட பொழுது, பாஸ்டிலி அவர்கள் கண்முன்னே நின்றது. உடனே அதனை நோக்கி மக்கள் கூட்டம் பாய்ந்தது.

மக்கள் அலையின் முன் மன்னனின் அதிகாரம் அழிந்தது; பாஸ்டிலி விழுந்தது.

"வீழ்ந்தது பாஸ்டிலி!" என மக்கள் ஆர்த்தனர், அதை யடுத்து "வாழ்க வால்டேர்!" என வாழ்த்தினர்.

வீழ்ந்த பாஸ்டிலி அவர்கள் எதிரே தாழ்ந்து கிடந்தது; ஆனால் அவர்களால் வாழ்த்தப்பட்ட வால்டேர் அவர்கள் மத்தியில் இல்லை. அவர் இறந்து பத்து ஆண்டுகளுக்கு மேலாகி விட்டது. ஆனால் பயத்தினால் கட்டப்பட்டுக் கொடுமையால் அடக்கப்பட்டு, அதிகாரத்துக்குப் பணிந்து, பிரபு—மதவாதிகள் முன் அடிஅடிமைப்பட்டிருந்த மக்களைத் தட்டி எழுப்பி பாஸ்டிலியை நோக்கி அனுப்பியது, வால்டேர். எனவேதான், பாஸ்டிலி வீழ்ந்த நேரத்தில் வால்டேரின் ஞாபகம் மக்களுக்கு வந்தது.

மூட நம்பிக்கைகளை முறியடித்துப், பிரெஞ்சு நாட்டில்-ஐரோப்பா கண்டத்தில் அறிவொளியைப் பரவச் செய்தவர் வால்டேர்.

இருண்ட அடிவானத்தில் முளைத்த விடிவெள்ளி வால்டேர். அதை யடுத்துப் புரட்சி எனும் செங்கதிர் தோன்றியது.

வால்டேர் பிறந்தது 1794 நவம்பர் 21ந்தேதி. குழந்தை பிறந்ததும், மிகவும் கஷ்டப்பட்டு மூச்சு விட்டவண்ணம் கிடந்தது. குழந்தை இறந்து விடுமென நினைத்துப் பக்கத்திலிருந்தவர்கள் அவசர அவசரமாக ஒரு பாதிரியை அழைத்துக் குழந்தைக்கு ஞானஸ்நானம் செய்தனர். கிருஸ்தவர்கள் நம்பிக்கையின்படி ஞானஸ்நானம் செய்யப்படாத குழந்தை கிருஸ்தவனாகாதலால் நரகத்தில் இடர்ப்பட வேண்டியிருக்கும். அதைத் தவிர்ப்பதற்காகக் குழந்தையின் மீது புனித நீரைத் தெளித்து கிருஸ்தவனாக்கினார்கள். பாவம்! அந்தப் பாதிரிக்கு அப்பொழுது தெரியாது, இந்தப் பொல்லாத குழந்தை பின்னால் வளர்ந்ததும், மோட்சம், நரகம், வேதம், ஞானஸ்நானம், குருமார் இவைகளை யெல்லாம் எவ்வளவு கேலிகளுக்கு உள்ளாக்கும் என்பது! குழந்தைக்குத் தரப்பட்ட பெயர் **பிரான்சாஸ் மரி அருட்** என்பதாகும். வால்டேர் என்பது பின்னால் தானாக வைத்துக்கொண்ட பெயராகும்.

வால்டேர் பிறந்த சமயத்தில் பிரஞ்சு மக்களின் உள்ளத்தில் மூட நம்பிக்கைகள் முழு ஆதிக்கத்தைச் செலுத்தி வந்தன. நாட்டு மக்களின் உழைப்பனைத்தும் குருமார்களையும், பிரபுக்களையும் கொழுக்கச் செய்யவே பயன் பட்டன. ஆலயத்திலிருந்து மதக்குரு ஆட்சி புரிந்தார்; அரண்மனையிலிருந்து மன்னன் ஆட்சி செலுத்தினான்.

மன்னன் கையில் செங்கோல் இருந்தது, மதக்குரு கையில் சிலுவை இருந்தது.

மன்னன் உடலை அடிமையாக்கி வந்தான்; மதக்குரு உள்ளத்தை அடிமையாக்கி வந்தான்.

மன்னனுக்கு உதவியாக நாட்டின் சட்டங்கள் இருந்தன; மதக்குரு வேதப் புத்தகங்களை உதவியாகப் பெற்றான்.

மன்னன் பாஸ்டிலியைக் காட்டி மிரட்டினான்; மதக்குரு படு நரகத்தைக் காட்டிப் பயமுறுத்தினார்.

இந்த உலகத்திலே பாதுகாப்பளிப்பதற்காக மன்னன் வரி கேட்டான், அடுத்த உலகத்தில் பாதுகாப்பதற்காக மதக்குரு காணிக்கை கேட்டான்-

மன்னன், மதக்குரு இருவரும் தங்களைக் கடவுளின் பிரதிநிதி என்று கூறிக்கொண்டு

18வது நூற்றாண்டு பிரெஞ்சு நாட்டு உடையில்
வால்டேர்

மக்களை அடிமைப்படுத்தி வந்தனர். இந்த முறையில் இருவரும் ஒருவருக்கொருவர் உதவி புரிந்து கொண்டனர். மன்னனுக்காக மதக்குரு பிரசாரம் செய்தான். மதக்குருவைக் காப்பாற்ற மன்னன் தயாராக இருந்தான்.

ஐரோப்பாவில் எங்கனும் அரசாங்கத்தின் ஆதரவு மதவாதிகளுக்கு இருந்ததால், மத நம்பிக்கைகளையும், குருட்டுப் பழக்க வழக்கங்களையும் எதிர்த்துப் பேச, நினைக்கவே எவரும் பயந்தனர். மத நம்பிக்கைகளைச் சந்தேகிக்கிறான் என யார் மீதேனும் சந்தேகம், சிறு புகார் தோன்றினால்கூடப் போதும், உடனே அவன் "பிசாசால் பிடிக்கப்பட்டவன்" எனக் குற்றஞ் சாட்டப்பட்டு இருட்டறைகளில் அடைக்கப்படுவார்கள்; சிலருக்கு கை கால்கள் ஒவ்வொன்றாக வெட்டி யெடுக்கப்படும்; சிலருடைய குடல்கள் பிய்த்து எடுக்கப்படும் சிலர் கை கால்கள் கட்டப்பட்டுத், தீக் குண்டங்களில் தூக்கி யெறியப்படுவார்கள். மூட நம்பிக்கைகளைக் கண்டிப்பவனுக்கு, தங்களுக்குத் தெரிந்த எல்லாவிதமான சித்ரவதைகளையும் தர மதவாதிகள் தயாராயிருந்தனர்.

இந்தச் சூழ்நிலையில்தான் வால்டேர் பிறந்தார். முன்பு குறிப்பிட்டபடி அவருக்கு அப்பொழுது பிரான்காஸ் மரி அருட் என்ற பெயரிடப்பட்டது. குழந்தை அருட் மிக மெல்லிய உடம்புடனும், பலமில்லா நவனுசவும் இருந்தான். அவனுடைய ஏழாவது வயதில் அவன் தாய் இறந்தாள். பத்து வயதுவரை அந்தக் கிராமத்துப் பாதிரியிடம் கல்வி கற்று வந்தான். தந்தைக்குச் சிறிது சொத்து இருந்தது. எனவே பத்து வயதில் வால்டேர் ஒரு பள்ளிக்கூடத்தில் சேர்க்கப்பட்டார். ஏழு ஆண்டுகள் அங்கு அவர் இருந்த போதிலும், கிரேக்க, லத்தீன் இலக்கியங்களில் சிலவற்றை அவர் படித்ததைத் தவிர, அவர் வேறெதுவும் கற்றுக்கொள்ளவில்லை.

வால்டேருக்கு இலக்கியத்தில் இருந்த ஆர்வம் அவருடைய பதினேழாவது வயதில் வெளிப்பட ஆரம்பித்தது. அந்த இளம் வயதில் "ஒதிபே" என்ற நாடகத்தை எழுதினார். அவருடைய பாட்டுக்களைப் படிக்கும் நண்பர்கள் அவருடைய திறமையைப் பாராட்டினார்கள். பையன் பாட்டுப் பித்தனாக இருப்பது அவனது தந்தைக்குப் பிடிக்கவில்லை. அவருடைய விருப்பம் மகன் படித்து, வழக்கறிஞனாக வேண்டுமென்பது. தந்தை விரும்பியது போல சட்டமன்றத்தில் வாதிடும் வழக்கறிஞனாக வால்டேர் ஆகவில்லை; சட்ட மன்றங்களைக் கடந்து, மக்கள் மன்றத்தில் அவர் வாதாடினார், நீதிக்காக, நேர்மைக்காக, பகுத்தறிவுக்காக, மனிதத் தன்மைக்காக. மூட நம்பிக்கை என்ற சூறாவளி மீது அவரைப்போல வழக்காடியவர்கள் யாரும் இருந்திருக்க முடியாது.

தன் மகன் "கவிதைகளைக் கட்டியழும் முட்டாளாக" இருப்பது கண்ட தந்தை, வால்டேரை அரசாங்க உத்தியோகத்தில் அமர்த்தி, ஹாலந்து நாட்டுக்குச் செல்லும் பிரெஞ்சு அரசாங்கத் தூதருடன் அனுப்பி வைத்தார். அங்கு, தான் கண்ட ஒரு இள மங்கையிடம்

வால்டேர் தன் மனதைப் பறிகொடுத்தார். காதல் கவிதைகள், சந்திப்பு, பேச்சு, பெருமூச்சு இப்படி ஒன்றன்பின் ஒன்று தொடர்ந்தன. காதல் பாதை என்றும் நேராக இருந்ததில்லையே! வழக்கம் போல் பெண்ணின் பெற்றோர், பெண்ணை வெளியே அனுப்பாது தடுத்து வைத்தனர். நிலைமையை உணர்ந்த வால்டேர், ரகசியமாக ஆண் உடைகளை அந்தப் பெண்ணிடம் அனுப்பி, ஆண் வேடத்தில் தன்னை வந்து சந்திக்கும்படி எழுதினர். ஆனால் வால்டேர் செய்த சூழ்ச்சி கண்டுபிடிக்கப்பட்டு, வேலையிலிருந்து உடனே நீக்கப்பட்டார். அந்தச் சமயத்தில் வால்டேர் தன் காதலிக்கு எழுதிய கடிதமொன்றில், "உன்னுடைய தாயின் கோபத்துக்கு உன்னை ஆளாக்கிக் கொள்ளாதே. கோபத்தை மூட்டினல் கொடுமைகளுக்கு ஆளாக வேண்டியிருக்கும். எதையும் வெளிக்காட்டிக் கொள்ளாதிரு, அதில்தான் தப்பும் வழி இருக்கிறது. வீட்டிலிருப்போர் உன்னை வற்புறுத்தினல் என்னை மறந்து விட்டதாகச்சொல்; என்னை வெறுப்பதாகக் கூடச் சொல். அப்படிச் சொன்ன பிறகு, முன்னைவிட அதிகமாக என்னைக்காதலிக்கவேண்டும்" என்று குறிப்பிட்டுள்ளார். இந்த முறையைத்தான், பிற்காலத்தில் மூர்க்கத்தனமான மதவாதிகளையும், ஆணவம் பிடித்த அதிகார வர்க்கத்தினரையும் எதிர்த்து நின்ற பொழுது கையாண்டு, தன் கொள்கைகளைப் பரப்பினர்.

வால்டேரின் காதல் கைகூடவில்லை. அரசாங்கத்திலிருந்த வேலையும் போயிற்று. இந்தச் சம்பவத்தைக் கேள்விப்பட்ட தந்தை, தன்னிடமிருந்து வால்டேர் எந்தப் பணவுதவியையும் எதிர்பார்க்க வேண்டாமென எழுதிவிட்டார். இதைத் தொடர்ந்து வால்ட்டேரைக் கைது செய்யும்படியாக அரசாங்க உத்திரவு வந்தது. கைது ஆகாமல் தப்ப வேண்டுமானல் நாட்டை விட்டு ஓடி விட வேண்டும். எனவே வால்டேர் திரும்ப பிரெஞ்சு நாட்டுக்கு வந்து விட்டார். இத்துடன் அவருடைய காதல்கதை முடிந்தது

வால்டேர் பாரிசுக்குத் திரும்பியதும், கவிதைகள் புனைதல், நாடகங்கள் எழுதுதல், நகைச்சுவையாகப் பேசிக் கூடியிருப்பவர்களைச் சிரிக்க வைப்பது இப்படிக் காலங்கழித்து வந்தார். அதிகாரத்திலுள்ளவர், மிகப் பெரிய பாதிரிகள், பிரபுக்கள் இவர்களைப்பற்றிப் பாரிஸ் நகரத்தில் ஏராளமான கேலிக் கவிதைகள் ஒவ்வொரு நாளும் வெளிவரும். அதில் வால்டேரும் கேலிக் கவிதைகள் எழுதி பரவவிட்டுக் கொண்டிருந்தார். ஒரு சமயம் பிரெஞ்சு நாட்டின் அரசனுக்குப் பிரதிநிதியாக ஆண்டு கொண்டிருந்த பிலிப் ஆர்லியன்ஸ் என்பவரைப் பற்றிய கேலிக்கவிதை எல்லோராலும் படிக்கப் பட்டது. அந்தக் கவிதையை எழுதிய குற்றத்துக்காக வால்டேர் பாஸ்டிலிச் சிறைச் சாலைக்கு அனுப்பப்பட்டார்.

பாஸ்டிலிச் சிறையில் வால்டேர் ஒரு ஆண்டுக்கு மேல் அடைத்து வைக்கப் பட்டிருந்தார் பாஸ்டிலிச் சிறைக்குள்ளிருந்த பொழுதும் வால்டேர் சும்மா இருந்துவிடவில்லை. "ஒதிபே" என்ற தன் முன் நாடகத்தைச் செப்பனிட்டு முடித்ததுடன், "ஹென்றியாதே" என்ற நீண்ட கதையை உயர்தரச் செய்யுள் நடையில் எழுத ஆரம்பித்து, அதில் சில பகுதிகளை முடித்தார்,

பதினேரு மாதங்கள் பாஸ்டிலிச் சிறையில் வாடியபின் வால்டேர் விடுவிக்கப்பட்டு, பாரிஸ் நகரத்திற்குள் வரக்கூடாதெனத் தடை விதிக்கப்பட்டு, 300 மைல் தொலைவுக்கு அனுப்பப் பட்டார். முதலில் துள்ளே என்ற இடத்திலும், பின் சல்லி என்ற இடத்திலும் அவர் ஒதுங்கி வாழ நேரிட்டது.

வால்டேர் மீது இருந்த அரசாங்க அதிருப்தி கொஞ்சப் மறைய ஆரம்பித்ததும், மீண்டும் பாரிசுக்குள் அவர் வந்தார். அவருடைய நாடகம "ஒதிபே" முதன் முறையாக நடிக்கப்பட்டது. பாரிஸ் நகரில் அதற்கு நல்ல பெயர் ஏற்பட்டதுடன், வால்டேரின் புகழ் பரவ ஆரம்பித்தது. மற்றும் பல நாடகங்களை வால்டேர் எழுதிக் கொண்டிருக்கும் பொழுது, அரசனுக்கு எதிராக அவர் கேலிக் கவிதைகளை எழுதுகிறுர் என்ற புகார் கிளம்பியது. வால்டேரின் எதிரிகள் அவரை மீண்டும் பாஸ்டிலிக்கு அனுப்ப அரசாங்கத்துக்கு ஆலோசனைகள் வழங்கினர்கள். வால்டேர் பழையபடி சல்லி என்ற இடத்துக்கு ஓடி விட்டார்.

பாரிசை விட்டு ஓடியும் கூட, பாஸ்டிலின் நிழல் அவர் பாதையில் விழுந்தபடி இருந்தது. சல்லியில் அவர் இருந்த பொழுது, ரோகன் என்ற பிரபுவுடன் சண்டை வளர்த்துக்கொண்டார். ஒருநாள் வால்டேர் தன் நண்பர்களுடன் உரக்கச் சிரித்துப் பேசிக் கொண்டிருக்

கும் பொழுது அந்தப் பக்கம் வந்த ரோகன் "உரக்கச் சத்தமிட்டுப் பேசும் அவன் யார்?" என்று கேட்டார். இந்தக் கேள்வி வால்டேர் காதில் விழுந்தது. பிரபுவின் இறுமாப்பைக் கண்ட வால்டேர் "சத்தம் போட்டுப் பேசுகிற அவன், பெரிய பெயர் எதையும் சுமந்து செல்வதில்லை; ஆனால் தனக்கு இருக்கும் பெயருக்குப் பெருமை உண்டாக்கிக் கொள்ள அவனுக்குத் தெரியும்" என்று பதிலளித்தார். பிரபுக்குக் கோபம் வந்தது; தன் ஆட்களை விட்டு வால்டேரைத் தனியாகக் கண்ட இடத்தில் அடித்து விட்டார். வெகுண்டெழுந்த வால்டேர், பிரபுவை வாட்போருக்கு அழைத்தார். பிரபு ஒருவரை எதிர்த்துப் பேசியதே பெரும் பிழை, அதிலும் அவரையே சண்டைக்கு அழைப்பதென்றால் அரசாங்கம் பார்த்துக் கொண்டு சும்மா இருக்குமா? பிரபுவை எதிர்த்த பேனா வோட்டியைப் பிடித்து பாஸ்டிலிக்கு அனுப்பியது. இரண்டாவது தடவையாக வால்டேர் பாஸ்டிலிக்குள் நுழைந்தார்.

இந்தத் தடவை பாஸ்டிலியில் வால்டேர் இரண்டு வாரங்கள்தான் தங்கியிருந்தார் என்ற போதிலும், வால்டேருடைய மனப் போக்கில் முக்கியமான மாறுதல்களைச் செய்தது. அநீதியையும், கொடுமையையும் எதிர்த்துப் போராட வேண்டுமென்ற உறுதி அவருக்குப் பிறந்தது. அதிலிருந்து அதிகாரத்துக்கு மாறாத எதிரியாக அவர் ஆனார். வால்டேர் என்ற பெயரே பாஸ்டிலியில் தான் பிறந்தது. அதுவரை அவர் பெயர் பிரான்சாஸ் மரி அரூட் என்பதாகவே இருந்தது. அந்தப் பெயரை மாற்றி வால்டேர் என வைத்துக் கொண்டு வெளி வந்தார்.

வேடிக்கையாகச் சிரித்துப் பேசும் பிரான்காஸ் மரி அரூட் பாஸ்டிலி சிறைக்குள் அனுப்பப்பட்டார். சிரிப்பை உண்டாக்கும் பொழுதே, சிந்தனையைக் கிளறும் வால்டேர் வெளிவந்தார்.

இரண்டு வாரங்களுக்குப்பின் பாஸ்டிலி பயங்கரச் சிறையிலிருந்து வால்டேர் விடுவிக்கப்பட்டார். உடனே பிரெஞ்சு நாட்டை விட்டு வெளியேறும்படி நாடுகடத்தப்பட்டு, வால்டேர் இங்கிலாந்து சென்றார்.

1726 லிருந்து 1729 வரை வால்டேர் இங்கிலாந்தில் தங்கியிருந்தார். விரைவில் ஆங்கில மொழியைக் கற்றுக் கொண்டு, இங்கிலாந்தில் வளர்ந்துள்ள அறிவுத் துறைகளைப் பற்றி அறிய ஆரம்பித்தார்; நியுட்டனின் விஞ்ஞானம், லாக் என்பவரின் சித்தாந்தம், ஷேக்ஸ்பியரின் நாடகங்கள் முதலியவற்றை விரும்பிப் படித்தார் விஞ்ஞான வளர்ச்சிக்கு ஆதரவு தர வேண்டுமென்ற எண்ணமும் பகுத்தறிந்து பார்த்துதான் எதையும் ஒப்புக்கொள்ள வேண்டும் என்ற கருத்தும் வால்டேரின் உள்ளத்தில் நிலைபெற்றன.

மூன்று ஆண்டுகள் கழித்து, பிரான்சுக்குத் திரும்பி வர வால்டேருக்கு அனுமதி கிடைத்தது. பாரிஸ் நகருக்கு வந்ததும், "புரூட்டஸ்" என்ற புது நாடகத்தை அரங்கேற்றினர்; அது அவருடைய புகழை மீண்டும் வெளிப்படுத்தியதுடன் நல்ல வருமானத்தைக் கொடுத்தது. அவர் எழுதிய பிரெஞ்சு நாட்டுச் சரித்திர நூலொன்று, பிரசுரிக்கப்பட்டு அது நல்ல முறையில் வரவேற்கப்பட்டது. அவருடைய புகழும் பணமும் பெருகி வருகிற சமயத்தில் அவர் எழுதிய "இங்கிலாந்தைப் பற்றிய சிந்தனைக்கட்டுரைகள்" என்ற தொகுப்பு நூல் அவருக்கு எதிராகப் பெரும் புயலைக் கிளப்பி விட்டது.

அந்த நூலில் இங்கிலந்தில் தான் கண்டவற்றைப் பற்றியும், அங்கு இருக்கும் நிலையுடன் பிரெஞ்சு நாட்டின் நிலையை ஒப்பிட்டுப் பார்த்தும், பிரெஞ்சு நாட்டில் காணப்படும் குறைகளைப் பற்றியும் வால்டேர் எழுதியிருந்தார். அந்தப் புத்தகத்தில் கிருஸ்தவ மதத்தில் ஒவ்வொரு பிரிவினரிடையும் காணப்படும் குறைபாடுகள், அரசாங்கத்தின் நடவடிக்கைகளில் பார்லிமெண்டுக்குள்ள உரிமைகள், விஞ்ஞான வளர்ச்சியால் வரும் நன்மைகள் விளக்கப்பட்டிருந்தன. நூல் வெளி வந்தவுடனேயே "மதத்துக்கு ஆபத்து அரசாங்கத்துக்கு எதிர்ப்பு" என்ற கூக்குரல்கள் எழுந்தன "பாப ஏடு" என அறிவித்து மதக்குருமார்கள் வால்டேரின் புத்தகத்தை எரிக்கும்படி செய்தனர். "மதத்துக்கு, நல்ல நம்பிக்கைகளுக்கு, ஆளும் வகுப்பினரின் மதிப்புக்கு இந்த புத்தகம் எதிர்ப்பானது, இழிவைத் தருவது; எனவே இந்தப் புத்தகத்தின் பிரதிகளைத் தும் பறிமுதல் செய்யப்பட்டு, ஏடு, ஏடாகக் கிழிக்கப்பட்டு, அரண்மனை வாயில் அருகே தீயில் போட்டுப் பொசுக்க வேண்டும்" என்று

டேரின் புத்தகங்கள் பறிமுதல் செய்யப்பட்டு, அழிக்கப்பட்டன. புத்தகத்தை வெளியிட்ட புத்தக வியாபாரி கைதி செய்யப்பட்டு, பாஸ்டிலியில் அடைக்கப்பட்டான். வால்டேரைக் கைது செய்யும்படி உத்தரவு வந்தது கைதாகாமல் தப்பி, தூரத்திலிருந்த சிர்ரி என்ற இடத்துக்கு வால்டேர் ஓடிவிட்டார்.

சிர்ரியில் சாட்லெட் என்பவருடைய மாளிகையில் தங்க வால்டேருக்கு அனுமதி கிடைத்தது அந்த இடத்தில் வால்டேர் 1734 லிருந்து 1749 வரை பதினைந்து ஆண்டுகள் தங்கியிருந்தார். இங்கு இருக்கும்பொழுது ஏராளமாக எழுதிக் குவித்தபடி இருந்தார். அவருடைய ஏடுகள் ஐரோப்பா முழுவதும் பரவின. மத நம்பிக்கைகளுக்கும் பாதிரிமார்களுக்கும் முதல் எதிரியாக வால்டேர் கருதப்பட்டார். அவருடைய தாக்குதல் பெரும்பாலும் மறைமுகமாகவே இருந்தன. நாடகங்கள், கவிதைகள், கதைகள், உரையாடல், கட்டுரைகள், வரலாறு இப்படி மாறி மாறி எழுதினார். கொஞ்சம் கடுமையாக இருக்கும் கட்டுரைகளில் வால்டேர் தன் பெயரைப் போடுவதில்லை. பாஸ்டிலி, பாதிரிகளின் தண்டனை, தீக்குண்டங்கள் இவைகளுக்குப் பயந்தபடியே அவர் வாழவேண்டி இருந்தது. ஆபத்து என்று தோன்றுகிற நேரத்தில், சிர்ரியிலிருந்து லொரெய்ன், ஹாலந்து இப்படி தூர இடங்களுக்கு ஓடிச் சென்று மீண்டும் வருவார். ஆனாலும் அவர் எழுதுவது குறையவில்லை.

1749 ல் வால்டேர் பாரிசுக்கு வந்தார். பாரிசிலே பல ஏமாற்றங்களும் தோல்விகளும் அவருக்குக் காத்துக்கொண்டிருந்தன. ஒரு ஆண்டு அங்கு தங்கியிருந்த பின், பிரஷியா நாட்டு மன்னன் பிரடரிக் அனுப்பிய அழைப்பை ஏற்றுக்கொண்டு, வால்டேர் பெர்லினுக்குச் சென்றார்.

பிரடரிக் மன்னன் இலக்கியம், கலை, சித்தாந்தம், கவிதை இவைகளில் ஆர்வம் காட்டி, அவற்றில் வல்லவர்களை தன் அரண்மனையில் வைத்து ஆதரித்து வந்தான். அந்த முறையில் வால்டேரைத் தன் தலைநகருக்கு வரும்படி பன்முறை எழுதியிருக்கிறான். வந்த புதிதில் வால்டேருக்கு அமோகமான வரவேற்பும், ஆதரவும் இருந்தன ஆனால் சிறிது காலத்திற்குள் வால்டேருக்கும், பிரடரிக் மன்னனுக்கும் பூசல் விளைந்தது. பிரடரிக் மன்னன் தான் எழுதிய கவிதைகளைச் சரிபார்த்துத் தரும்படி வால்டேருக்கு அனுப்பினான். "அழுக்கு உடைகளை நான் வெளுத்து தர வேண்டியிருக்கிறது" என்று வால்டேர் சொல்லிவிட்டார். இது பிரடரிக் மன்னனுக்குக் கோபத்தைத் தந்தது. இதன் பின் நடந்த சில காரியங்கள் இருவருக்குமிடையே இருந்த விரோதத்தை வளர்த்தன. பெர்லினில் தங்கியிருப்பது ஆபத்து என்று கண்ட வால்டேர் பிரெஞ்சு நாட்டுக்குக் கிளம்பினார். பிரஷிய நாட்டு எல்லையைக் கடக்கிற நேரத்தில் பிரடரிக் மன்னனின் ஆட்களால் அவர் கைது செய்யப்பட்டு, அவருடைய பெட்டிகள் சோதனையிடப்பட்டன. பிரடரிக் மன்னன் தந்த கவி அரசாங்க உத்தரவு வந்தது. அதன்படி வால்

பிராங்க்பர்டில் வால்டேர் கைது செய்யப்படுதல்.

கீதங்களை அவர் மறைத்து எடுத்துக்கொண்டு போகிறாரா என அதிகாரிகள் தேடினர். பிராங்பர்ட்டில் வால்டேர் சில நாட்கள் காவலில் இருந்தபின், நாட்டை விட்டுப்போக அனுமதிக்கப்பட்டார்.

பிரஷியாவிலிருந்து வால்டேர் வந்து விட்டார். ஆனால் எங்கு போவதென்று அவருக்குப் புரியவில்லை. பாரிஸ் நகரில் அவருக்குப் பாதிரிகளிடமும், அதிகாரிகளிடமும் பலத்த எதிர்ப்பு இருந்தது. போனால் பாஸ்டிலியிலோ, பாதாளச் சிறையிலோ போடத் தவறமாட்டார்கள். மற்ற பிரெஞ்சு நகர்களிலும் அவரால் தங்க முடியவில்லை. கடைசியாகத் தொல்லைகளைத் தாங்கமுடியாமல், பிரான்சை விட்டு வெளியேறி, சுவிட்சர்லாந்தின் தலைநகரான ஜெனிவாவுக்குப் போனார். அங்கும் அவருடைய கஷ்டங்கள் தீரவில்லை. அவர் எழுதிய கட்டுரைகளால் பாதிக்கப்பட்ட மதவாதிகள் ஜெனிவாவில் அவரை இருக்கவொட்டாது செய்தனர். வால்டேர் அந்த இடத்தை விட்டு பெர்னி என்ற பிரெஞ்சு சிற்றூர் ஒன்றை வந்தடைந்தார்.

பெர்னி பிரெஞ்சு-சுவிட்சர்லாந்து எல்லையில் இருந்தது. எனவே பிரெஞ்சு அதிகாரிகளிடமிருந்து எதிர்ப்பு வந்தால் சுவிட்சர்லாந்துக்குள் ஓடிவிடலாம். அதேபோல் ஜெனிவாவிலிருந்து ஆபத்துக் கிளம்பினால் பிரெஞ்சு நாட்டுக்குள் சென்றுவிடலாம். இந்த வசதியை முன்னிட்டு, வால்டேர் அந்தக் கிராமத்தில் சில நிலங்களை வாங்கிக்கொண்டு தங்கிவிட்டார்.

ஒரு ஊரிலிருந்து மற்றொரு ஊருக்கு, ஒரு நாட்டிலிருந்து மற்றொரு நாட்டுக்கு என ஓடி மறைந்து வாழ்ந்து வந்த வால்டேருக்குக் கடைசியாக பெர்னியில் அமைதி கிடைத்தது. பெர்னிக்கு வரும்பொழுது அவருக்கு வயது அறுபத்தி நான்கு. சுமார் இருபது ஆண்டுகள், சாகும்வரை, அந்தக் கிராமத்திலேயே வால்டேர் தங்கியிருந்தார்.

வால்டேரின் வரவால் பெர்னியின் பெயர் ஐரோப்பா வெங்கும் பரவியது. அங்கிருந்து வெள்ளம் போல, ஒன்றன்பின் ஒன்றாகக் கட்டுரைகள், வரலாறுகள், கதைகள் வெளிவந்தன. ஐரோப்பாவின் அறிவுத் தலைநகராக, இலக்கிய கூடமாக பெர்னி ஆயிற்று.

பெர்னியில் வால்டேர் இருக்கும் பொழுது ஒரு முக்கியமான சம்பவம் நடைபெற்றது. தூலூஸ் என்ற பிரெஞ்சு நகரில் ஜான் காலஸ் என்ற வியாபாரி ஒருவர் இருந்தார். அவர் பிராடெஸ்டண்டு மதத்தைச் சார்ந்தவர். ஆனால் தூலூஸ் நகரில் கத்தோலிக்க மதத்தினர்தான் அதிகம். இதனால் காலஸ் அங்கு வேண்டாத மனிதராக மற்றவர்களால் ஒதுக்கப்பட்டு வாழ்ந்துவந்தார். காலஸுக்கு இருந்த இரண்டு பிள்ளைகளில் ஒருவன் சிறிது சித்த சுவாதீனமின்றி இருந்து கடைசியில் இறந்துவிட்டான். ஆனால் "மகன் தானாக இறக்கவில்லை, கத்தோலிக்க மதத்தில் சேர அவன் தயாராக இருந்தான், அதற்காக அவன் தந்தை காலஸ் அவனைக் கொன்றுவிட்டார்" என்று ஊரிலுள்ள கத்தோலிக்கர்கள் பேசிக்கொண்டனர். "காலஸ் கொலைகாரன்" என்ற குற்றச்சாட்டு பரவியது. காலசும், அவனது குடும்பத்தினரும் கைது செய்யப்பட்டு பெயருக்கு ஒரு விசாரணை நடந்தது. "நான் ஏதும் அறியேன்! என் மகனை நானேவா கொல்வேன்! இது பொய்! பொய்! நான் ஓர் நிரபராதி நிரபராதி." எனக் காலஸ் குற்றவாளிக் கூண்டிலிருந்து கூவினான், கண்ணீர் விட்டுக் கலங்கினான், கதறினான். ஆனால் கல்மனம் படைத்த மதவாதிகள் கலங்கவில்லை. "காலஸ் கொலைகாரன்" எனத் தீர்மானித்தனர். தண்டனை தரப்பட்டது.

காலஸ் படுக்கையாகக் கிடத்தப்பட்டான். தண்டனையை நிறைவேற்றுபவன் ஒரு பெரிய இரும்புக் கடப்பாரையை எடுத்து வந்து, கீழே கிடந்த காலசின் கையில் ஓங்கி அடித்தான். "ஐயோ!" என்று காலஸ் புரண்டு விழுந்தான். கையெலும்பு நொறுங்கியது. மற்றொரு கையும் நொறுக்கப்பட்டது பின் அதேபோல் கால் எலும்புகளும் சிதைக்கப்பட்டன. கடைசியாக காலசின் மார்பை நோக்கி இரும்புப் பாரை விழுந்தது. மார்பின் எலும்புகள் நொறுங்கின. கூடியிருந்த "இரக்கவாதிகள்" அத்துடன் விடவில்லை.

துடித்துக் கொண்டிருந்த காலசின் கால்கள் ஒரு முளையுடன் கட்டப்பட்டன. அவனுடைய கைகள் ஒரு சக்கரத்துடன் பிணைக்கப்பட்டு, சக்கரம் மெதுவாகச் சுழற்றப்பட்டது. இதனால் உடல் நீட்டப்பட்டு, கொஞ்சங் கொஞ்சமாகச் சதை பிய்க்கப்பட்டு, எலும்பு பிரிக்கப்பட்டு, அணு அணுவாக உயிர்

பிரிந்து போகும்படி செய்யப்பட்டது. இந்த வேதனையில் கூட காலஸ் அருகிலிருந்த "கருணை மிகுந்த" பாதிரியைப் பார்த்து "நான் குற்றமற்றவனாகவே சாகிறேன்" என்று கூறினான். உடல் முற்றிலும் சிதைக்கப்பட்ட பின், பக்கத்தில் ஏற்றப்பட்டிருந்த தீக்குழியில் காலஸ் எறியப்பட்டான். இவ்வாறு "குற்றவாளி" காலஸ் இறந்தான். "ஒழிந்தான் காலஸ்" என மதவாதிகள் ஆர்த்தனர். பரமண்டலத்துப் பிதாவைத் திருப்திபடுத்திவிட்டோமென பாதிரி களிப்படைந்தார். எல்லாம் அடங்கிவிட்டது என அவர்கள் நினைத்தனர். ஆனால் அவர்கள் மறந்துவிட்டனர், பிரான்ஸ் நாட்டில் வால்டேர் என்ற ஒருவன் வாழ்ந்து கொண்டிருக்கிறான் என்பதை!

தண்டனை தரப்பட்டு, பல மாதங்கள் கழித்து தான், அவ்வாறு ஒருவழக்கு நடைபெற்றது என்று வால்டேருக்குத் தெரியவந்தது. "அநீதி ஒன்று நிகழ்ந்து விட்டது" என்று கேள்விப்பட்டவுடன், வால்டேர் வெகுண்டெழுந்தார். இதுவரையில் மதம் புரியும் கேடுகளைப்பற்றியும், மதவாதிகளின் பிற்போக்குத் தன்மைகளைப்பற்றியும் அவர் ஏராளமாக எழுதியிருக்கிறார் ஏட்டிலே; ஆனால் இன்று நாட்டிலே நேருக்கு நேர் அவற்றை அவர் சந்திக்க நேரிட்டது. வால்டேர் பின்வாங்கவில்லை. போராட்டத்துக்குத் தயாரானார்.

வால்டேருக்கு அப்பொழுது வயது 68. உடல் நிலை மோசமாகத்தான் இருந்தது. ஆனால் மனிதாபிமானம் மிகுந்த அவர் உள்ளத்திலே மாபெரும் கொந்தளிப்பு ஏற்பட்டது. மற்றெல்லாவற்றையும் மறந்தார். காலஸ் வழக்கு அவர் முழு கவனத்தையும் ஈர்த்தது. பிரெஞ்சு நாட்டிலிருந்து விரட்டப்பட்ட காலஸ் குடும்பத்தினரை தன் இடத்திற்கு வரவழைத்து உண்மைகளை நேரில் தெரிந்து கொண்டார். அவர்களுக்கு தன் வீட்டில் அடைக்கலம் தந்துவிட்டு, "அநீதிக்கு எதிராகப் போர்" ஆரம்பித்து விட்டதென வால்டேர் கிளம்பினார். "காலஸ் நிரபராதி; அநீதியால் அவன் கொலை செய்யப்பட்டான்." எனக் கட்டுரை வரைந்தார். முக்கியமானவர்களுக்கு கடிதங்கள் எழுதினார். சிரித்துப் பேசும் வால்டேர், சிரித்துப் பேசும் வால்டேரானார். "காலஸ் ஒருவன் இறந்தான், அதற்காக உங்களை, அத்துடன் மிகப் பலரையும் ஆபத்துக்குள்ளாக்கிக் கொள்ளாதீர்கள்" எனச் சிலர் வால்டேருக்கு அறிவுறுத்தினர். வால்டேரின் கண்களில் கோபக் கனல் வீசியது. "காலஸ்களை விட அநீதி வழங்குவோர் அதிகமாக உள்ளனர். காலஸ் இறந்தான், அத்துடன் நீதியும் இறந்துவிடக் கூடாது" என முழங்கினர்.

பெர்னியிலிருந்த சிங்கத்தின் முழக்கம் ஐரோப்பாவையேக் கதிகலங்க அடித்தது. காலஸ் வழக்கைப்பற்றிப் பேசாத நாடில்லை, விவாதிக்காத இடமில்லை. வால்டேருக்கு உதவியாக பிரஷிய நாட்டு மன்னன் பிரடரிக் (முன்பு வால்டேருடன் சண்டையிட்டுக் கொண்ட போதிலும், அவரிடம் தான் வைத்த மதிப்பை மாற்றிக்கொள்ளவில்லை) ருஷிய நாட்டுப் பேரரசி காதரின் முதலானோர் வால்டேரை ஆதரித்து எழுதினார்கள். காலஸ் வழக்கு ஐரோப்பிய அரசியலில் ஒரு முக்கிய பிரச்சினையாக ஆகியது.

நான்கு ஆண்டுகள் வால்டேர் ஓயாமல் உழைத்தார். அப்பொழுதெல்லாம் அவரை நெருங்கி மற்ற விஷயங்களைப் பற்றி பேசவே எவரும் அஞ்சினர். காலஸ் வழக்கை நினைக்கும்பொழுதெல்லாம் அவருடைய மனம் கொதித்தது. "காலஸ் வழக்கு முடிகிற வரை, சிரிப்பதுகூட எனக்குத் தவறாகப்பட்டது" என்று பின்னால் ஒருமுறை வால்டேர் கூறினார்.

கடைசியாக, தண்டனை நிறைவேற்றப்பட்ட நான்கு ஆண்டுகள் கழித்து, காலஸ் வழக்கு பாரிஸ் பார்லிமெண்டால் விசாரிக்கப்பட்டது. "காலஸ் குற்றமற்றவன்" எனத் தீர்மானிக்கப்பட்டு, அவனுடைய குடும்பத்தினர் நாடு திரும்பும் உரிமையும், பாதுகாப்புக்காகப் பெருந்தொகையும் தரப்பட்டன. நாடெங்கும் என்றுமில்லாத குதுகலம் ஏற்பட்டது. வால்டேர் அடைந்த வெற்றிகுறித்து விழாக்கள் நடந்தன. காலஸ் குடும்பத்தினர் ஊர்வலமாக அழைத்துச் செல்லப்பட்டனர். மாலைகளும், வாழ்த்துரைகளும் தரப்பட்டன. நீதி நிலைத்தது என ஆரவாரித்தனர். பெர்னியில் தங்கியிருந்த கிழவரின் முகத்தில் நான்கு

ஆண்டுகளாக மறைந்திருந்த மகிழ்ச்சி அரும்பியது.

காலஸ்வழக்கில் வெற்றியடைந்த பின், அநீதி எங்கு நிகழ்ந்தாலும் வால்டேருக்கு அது அறிவிக்கப்படும். தளர்ச்சியெதுவும் காட்டாமல், வால்டேரும் அவற்றையேற்று நீதிக்காகப் போராடினார். பாதிக்கப்பட்ட குடும்பத்தினரைதான் ஏற்றுப் பாதுகாத்தார். காலஸ் வழக்கைப் போன்றே மேலும் ஐந்தாறு வழக்குகளை அவர் நடத்தி வெற்றி கண்டார்.

நண்பர்களின் வற்புறுத்தலின் பேரில் வால்டேர் பாரிசுக்குக் கிளம்பினார். அப்பொழுது அவருக்கு வயது 83. மிகவும் நீண்ட பயணத்துக்குப்பின் வால்டேர் பாரிஸ் வந்தடைந்தார். வால்டேர் வருகிறார் என்றதும் பாரிஸ் விழாக் கோலம் பூண்டது. எந்தப் பாரிஸ் நகரிலிருந்து சட்டம் அவரை விரட்டியடித்ததோ, அதே நகரம் வரவேற்பு வளைவுகளை அமைத்து, தோரணங்களைக் கட்டி, மாலைகளைச் சூட்டி, வாழ்த்திதழ்களை அளித்து வரவேற்றது. இந்த எழுச்சியை அரண்மனை வாசிகளாலோ, ஆலய விசுவாசிகளாலோ அடக்க முடியவில்லை. எனவே ஒதுங்கி நின்றனர். மன்னன் அரண்மனையில் அடைந்து கிடந்தான். மக்களின் முடிசூடா மன்னன் நகர வீதியில் ஊர்வலமாக வந்தான். அன்று இரவு வால்டேர் எழுதிய "ஐரேன்" என்ற நாடகம் நடிக்கப்பட்டது. நகரெங்கும் "வால்டேர்" "வால்டேர்" என்றே பேச்சு. அவர் தங்கியிருந்த வீட்டைச் சூழ்ந்து ஏராளமான மக்கள் கூட்டமாக நின்றபடி இருந்தனர்.

அவருக்குக் கிடைத்த பாராட்டுதலே அவரைத் தளரச் செய்துவிட்டது. முதிய வயதில், எல்லா நிகழ்ச்சிகளிலும் கலந்து கொண்டு, வருவோர் போவோருடனும் பேசிக்கொண்டு அவரால் இருக்கமுடியவில்லை. உடல் நலிவடைந்து, இருமல் வந்து, கடுமையான காய்ச்சல் தோன்றியது. அவர் இறந்துவிடுவாரெனத் தெரிந்ததும், அவருக்குப் பாவமன்னிப்புத்தர பாதிரிமார்கள் அவரை நெருங்கினர். "என்னை இப்பொழுதாவது சற்று அமைதியாயிருக்க விடுங்கள்" என்று அனுப்பிவிட்டார். இரவு பதினொரு மணி. படுக்கையருகே இருந்த மோராண்ட் என்ற நண்பர், தன்னை கூப்பிடும் சத்தம் கேட்டு, வால்டேர் அருகே சென்றார். "கடைசி வணக்கம் மோராண்ட்! நான் செல்கிறேன்" என்று வால்டேர் சொன்னார். இவை தாம் அவர் கூறிய கடைசி வார்த்தைகள். உடனே தலை சாய்ந்தது. வால்டேர் இறந்து விட்டார்.

1778-ம் ஆண்டு மே திங்கள் 30-ம் நாள் இரவு 11-15க்கு பிரஞ்சு நாட்டு மண்ணை விட்டு சுடரொளி அகன்றது, உலக வரலாற்றிலே ஒரு நிலையான இடத்தைப் பெற.

வால்டேர் இறந்தார், அவர் இறப்பதற்கு முன் மூட நம்பிக்கைகளின் மகத்துவம் மங்கத் தொடங்கிவிட்டது, மதவெறி மட்டந்தட்டப் பட்டுவிட்டது, அதிகாரத்தின் அடிப்படை அசையத் தொடங்கியது, மன்னனின் ஆட்சி பீடம் ஆட ஆரம்பித்தது.

நாடு இருண்டு கிடந்த நேரத்தில் தோன்றினார், இறக்கும் பொழுது அறிவின் ஒளிக்கதிர்கள் நாட்டிலே வீசக்கொண்டிருந்தன.

83 ஆண்டுகள் வால்டேர் வாழ்ந்தார். ஆனால் பல நூற்றாண்டுகளாக நிலைபெற்றிருந்த மூட நம்பிக்கைகள் சாகடிக்கப்பட்டன.

பிரெஞ்சு நாட்டில் ஏற்பட்ட பெரும் புரட்சிக்கு முதற் தூண்டுகோலாக இருந்தவர் வால்டேர். ஆனால் அவருக்குப் போர்முறையோ, தாக்குதல் வகைகளோ தெரியாது. அவர் களம் காணாதவர், துப்பாக்கி பிடித்தறியாதவர். அவருக்குக் கிடைத்த களம் காகிதம்தான், துப்பாக்கி பேனாதான்.

அவருடைய அழகிய நடையிலே, புன்னகை, கேலி, சிரிப்பு, சிந்தனை, ஒழுங்கு, உயர்வு, எழுச்சி, எளிமை, தெளிவு, புதுமை இவ்வளவும் கலந்து வந்தன. அவருடைய சிரிப்பு சிந்தனையைக் கிளறியது, புன்னகை புரட்சியைத் தந்தது.

வால்டேர் எழுதியவை அனைத்தும் சுமார் 50 பெரும் வால்யூம்களுக்கு மேல் சேர்க்கப் பட்டிருக்கின்றன. அந்தப் புத்தகங்களின் வரிசையைப் பார்க்கும்பொழுது, வால்டேர் ஒரு எழுத்துப் பூச்சி, புத்தகப் புழு என்று சொல்லத்தோன்றும். ஆனால் இந்த ஏடுகள்தாம், பிரெஞ்சு நாட்டில், உலக வரலாற்றில் மாபெரும் புரட்சியை உண்டாக்கின. எனவேதான் புரட்சி தோன்றியபொழுது, பாஸ்டில் தகர்ந்த பொழுது, "வாழ்க வால்டேர்!" என்ற பேரொலி கிளம்பியது.

மகான் பாபாபெக்

இந்தியாவில், பிராமணர்களுக்குப் புனித நகரமான காசியில் கங்கைக் கரையருகே நான் கொஞ்சகாலம் தங்கியிருந்தேன். அந்த நாட்டில் வழங்கிய மதம், மொழி, பழக்க வழக்கங்களைப் பற்றிக் கொஞ்சங் கொஞ்சமாக எனக்குத் தெரிய ஆரம்பித்தது. நான் ஓம்ரி என்ற நண்பருடன் தங்கி யிருந்தேன். ஓம்ரி பிராமண மதத்தைச் சேர்ந்தவர். உண்ணுவது உறங்குவது எல்லாவற்றிலும் இருவரும் எவ்வித வேற்றுமையின்றி, இரு சகோதரர்களைப்போல, வாழ்ந்துவந்தோம். ஓய்வு நேரத்தில், மதவிவகாரங்களைத் தவிர வேறெதைப் பற்றியும நாங்கள் பேசுவதில்லை.

ஒரு நாள் நானும் ஓம்ரியும் பக்கத்திலிருந்த கோயிலுக்குப் போயிருந்தோம். அங்கு பல சந்நியாசிகள் உட்கார்ந்திருந்தனர். சிலர் தியானத்தில் அமர்ந்திருந்தார்கள். மற்றும் சிலர் புனித ஏடுகளைப் புரட்டிக் கொண்டிருந்தனர். அவர்களெல்லாம் மற்றவர்களுக்குப் புரியாத, விநோதமான ஒரு மொழியில் பேசிக் கொண்டார்கள். அந்தப் புரியாத மொழியில் தான் பிராமணர்களுடைய சாஸ்திரங்கள் இருப்பதாகக் கூறப்பட்டது. மேலும் அந்த சாஸ்திரங்கள்தாம் மிகப் பழமையானவை என, எத்தகையச் சந்தேகத்துக்கும் இடமின்றி, கருதப்பட்டன.

இப்படிப்பட்ட ஒரு சாஸ்திரத்தைப் படித்துக்கொண்டிருக்கும் சந்நியாசியை நான் கடந்து சென்றேன். உடனே அந்தச் சந்நியாசிக்கு என்மீது கோபம் வந்தது. "அட, பாபி! நீ வந்ததால், என்னுடைய சாஸ்திரத்தில், இரண்டு மூன்று எழுத்துக்களைச் சரிவர உச்சரிக்காமல் விட்டு விட்டேன். இதனால் நான் அடுத்த பிறவியில் ஒரு கிளியாகப் பிறப்பதற்குப் பதில் ஒரு முயலாகப் பிறக்கவேண்டி நேரிடுமே என்று கவலைப்படுகிறேன். இப்படி விடாமல் படிப்பதால், ஒரு கிளியாகப் பிறந்து விடலாம் என எவ்வளவோ பெருமைப் பட்டுக்கொண்டிருந்தேன். உன்னால் அதற்கு நாசம் வந்து விட்டது" என்று என்னைப் பார்த்துச் சபிக்க ஆரம்பித்தார்.

நான் அவருக்குச் செய்த ஆபத்துக்காக, ஒரு வெள்ளிக் காசை அவருக்குக் கொடுத்தேன். அவர் அத்துடன் அடங்கிவிட்டார்.

இரண்டு, மூன்று அடி மேற்கொண்டு நான் சென்றதும், எனக்குத் தும்மல் வந்தது. அதனால் அடுத்து இருந்த வேறொரு சந்நியாசியின் தவம் கெட்டுவிட்டது.

"தெய்வமே! இவன் எவ்வளவு பெரிய சத்தத்தை உண்டாக்குகிறான். மூக்கு நுனியைப் பார்த்துக் கொண்டு, நான் ஆழ்ந்திருந்த தவம் கெட்டுவிட்டது! என் முன்னே காணப்பட்ட தெய்வீக ஒளி மறைந்து விட்டது!" என்று அந்தச் சந்நியாசி முறையிட்டார்.

"பெரியவரே! உங்களுடைய ஆழ்ந்த தியானத்தை நான் கலைத்து விட்டது உண்மையானால், அந்த மாபெரும் தவறுக்கு ஈடாக இந்த ஒரு வெள்ளிக்காசை வைத்துக் கொள்ளுங்கள். மறுபடியும் தியானத்தில் அமர்ந்து பார்த்தால், மறைந்து போன தெய்வீக ஒளி மீண்டும் வந்து விடும், என்று ஆறுதலளித்து விட்டு, மேற்கொண்டு நான் சென்றேன்.

ஒவ்வொரு சமயமும் ஏதாவது ஒரு தவறு நிகழ்ந்து விட்டால், அதற்குப் பிராயச்சித்தமாக ஏதாவது காசு கொடுத்து வந்தேன். என்னைப்பார்த்ததும், சில சந்நியாசிகள் என்னிடம் சில கூர்மையான ஆணிகளைக் கொடுத்து அவற்றைக் கையிலும் காலிலும் குத்திக் கொண்டால் கடவுளுக்குப் பிரியமாயிருக்கும் என்று சொன்னார்கள். நான் ஒன்றும் பேசாமல் அவைகளை வாங்கி என் பையில் வைத்துக்கொண்டேன்; அவைகள் பின்னால் என் மரப் பெட்டியைச் சரி செய்வதற்கு உதவியாக இருந்தன. அங்கு இருந்த ஒவ்வொரு சந்நியாசியும் ஒவ்வொரு விதமான வேலையில் ஈடுபட்டிருந்தனர். சிலர் கையை ஊன்றித் தலை கீழாக நின்றுகொண்டிருந்தார்கள். சிலர் கயிற்றின் மேல் ஆடிக்கொண்டிருந்தார்கள்.

சிலர் ஒற்றைக் காலால் நடந்து வந்தார்கள். மற்றொரு பக்கத்தில் சிலர் பெரிய இரும்புச் சங்கிலிகளை மேலே போட்டுக் கொண்டு உலவி வந்தார்கள். இந்த உயர்தர மகான்களைப் பார்த்துக்கொண்டு வரும் பொழுது, என் நண்பர் ஓம்ரி பக்கத்திலிருந்த தனியறையி லிருந்த பாபாபெக் என்ற மகானைக் காண என்னை அழைத்துச்சென்றார்.

பாபாபெக் முழு நிர்வாணத்துடன் கனமான இரும்புச் சங்கிலி யொன்றைக் கழுத்தில் சுற்றிக்கொண்டு உட்கார்ந்திருந்தார். மிகக் கூர்மையான ஆணிகள் நிரம்பிய ஒரு பலகையின் மீது அவர் உட்கார்ந்திருந்த போதிலும், ஏதோ ஒரு பட்டுமெத்தையில் அமர்ந்திருப்பது போன்று அவர் உல்லாசத்துடன்தான் இருந்தார். அவரைச் சுற்றி ஏராளமான பெண்கள் அவருடைய உபதேச மொழிகளைக் கேட்கவேண்டி உட்கார்ந்திருந்தனர். அவருடைய பேச்சு, அங்கு குழுமியிருந்த எல்லோராலும் தெய்வ வாக்காக எடுத்துக்கொள்ளப்பட்டது. அந்தப் பக்கத்தில் அவர்தான் மிக்கப் புகழ்பெற்ற மகானாக விளங்கினார்.

என்னுடைய நண்பர் ஓம்ரி அவருடன் சிறிது நேரம் உரையாடினார்.

"மகானே! ஏழுபிறப்பையும் கடந்த பிறகு, நான் பிரம்மலோகத்திற்குப் போய்ச்சேர்ந்து விடுவேனா?" என்று ஓம்ரி கேட்டார்.

"அப்படி நிகழலாம். அதைத் தெரிந்து கொள்ள நீ இப்பொழுது எப்படிப்பட்ட வாழ்க்கையை நடத்துகிறாய் என்று தெரிய வேண்டும்" என்று பாபாபெக் கேட்டார்.

"நான் ஒரு நல்ல மனிதனாக, ஒழுக்கங் குலையாத கணவனாக, அன்புடைய தந்தையாக, ஆதரிக்கும் நண்பனாக இருந்து வருகிறேன். நற்குணங்களை விரும்பி, அவற்றின்படி வாழ்கிறேன். யாருக்கும் கடன் கொடுத்தால் வட்டி வாங்குவதில்லை. ஏழைகள் உதவிகேட்டால், அவர்கள்கேட்டதை இனமாகக் கொடுத்து விடுவேன். என் அண்டை அயலாருடன் அன்புடனும் நேசபாவத்துடனும் வாழ்கிறேன்" என்று ஓம்ரி சொன்னார். அவர் சொல்லியது உண்மை யென்பது எனக்குத் தெரியும்.

"அதெல்லாம் இருக்கட்டும், நீ எப்பொழுதாவது, உன்னுடைய உடம்பில் ஆணிகளை ஏற்றிக் கொண்டதுண்டா?" என்று மகான் கேட்டார்.

"இல்லையே." என்று ஓம்ரி பதிலளித்தார்.

"பரிதாபம்! பரிதாபம்! உனக்காக நான் மிகவும் பரிதாபப்படுகிறேன்! உன்னால் பத்தொன்பதாவது சொர்க்கத்தைத் தாண்டி, மேலே போக முடியாது" என்று பாபாபெக் தெரிவித்தார்.

ஓம்ரி வருத்தப்படவில்லை; "அதுவே எனக்குப் போதுமானது. நான் செய்கிற காரியங்கள் ஒழுங்காக இருக்கிறவரை, நான் நடத்துகிற வாழ்க்கை நல்லதாக இருக்கிறவரை, எனக்குப் பத்தொன்பதாவது சொர்க்கமோ, இருபதாவது சொர்க்கமோ எது வந்தாலும் பரவாயில்லை. இப்பொழுது நல்ல வாழ்க்கையை நடத்துவது, அடுத்த வாழ்வில் பரமபதத்தை அடைவது இரண்டும் ஒருங்கே ஒருவனுக்கே கிடைக்காதா? இவை ஒருபுறமிருக்க, நீங்கள் இரும்புச் சங்கிலியைச் சுமந்து கொண்டு, முள் மெத்தையில் உட்கார்ந்திருக்கிறீர்களே, உங்களுக்கு எந்தச் சொர்க்கம் கிடைக்கும்?" என்று ஓம்ரி கேட்டார்.

"எனக்கு முப்பத்தைந்தாவது சொர்க்கம் கிடைக்கும்" என்று மகான் பெருமிதத்துடன் பதிலளித்தார்.

"என்னைவிட உங்களுக்கு உயர்ந்த சொர்க்கம் கிடைக்கப் போகிறது என்பதை, நீங்கள் மிக அடக்கத்துடன் சொல்வதைக் கேட்டு நான் மகிழ்ச்சியடைகிறேன். ஆனால் உயர்ந்த சொர்க்கமொன்றை அடைய வேண்டுமென நீங்கள் விரும்புவதே அதிக ஆசைப்படுவதாகாதா? இந்த உலகத்தில் எதன் மீதும் ஆசைப்படக் கூடாது என்று, மற்றவர்களுக்கு உபதேசிக்கிற நீங்கள் மட்டும், மறு உலகத்தில் உயர்ந்த இடம் வேண்டுமென்று ஆசைப்படலாமா? எந்தக் காரணத்தைக் காட்டி, என்னைவிட உங்களுக்கு அதிக உரிமைகள் கிடைக்கும்? நீங்கள் பத்து வருஷ காலமாக, உங்கள் உடம்பில் எவ்வளவு ஆணிகளைப் படும்படிச் செய்கிறீர்களோ, அதைவிட அதிகமான எண்ணிக்கையுள்ள ஏழைகளுக்கு நான் உணவுகொடுத்து ஆதரிக்கிறேன். முழுநிர்வாணமாக உட்கார்ந்துகொண்டு கழுத்தில் சங்கிலியைப் போட்டுக் கொள்வதால், கடவுளுக்கு என்ன ஏற்படப்போகிறது? இதனால்

நாட்டுக்காவது ஏதாவது பலன் உண்டா? உங்களைப்போல மூக்கைப் பார்த்துக்கொண்டும், நாக்கை நீட்டிக்கொண்டும், காலை முடக்கிக் கொண்டும், கல்லைக் கட்டிக்கொண்டும் இருக்கும் உங்கள் எல்லோரையும் விட, வயலிலே விதை தூவுகிற உழவன், தோட்டத்தில் செடியைப் பாதுகாக்கிற வேலையாள் இவர்களிடம் எனக்கு ஆயிரம் பங்கு அதிகமான மதிப்பு உண்டாகிறது'' என்று ஓம்ரி மிக உணர்ச்சியுடன் பேசி முடித்தார்.

அத்துடன் விட்டுப் போகாமல், ஓம்ரி அந்தப் பிராமணன் பக்கத்தில் உட்கார்ந்து, அந்த முள், சங்கிலி இவைகளை எறிந்துவிட்டு, தன்னுடன் வந்து சகல வசதியுடன் வாழவேண்டுமென வற்புறுத்திக் கூறினர்.

சாதாரண வாழ்க்கையில் கிடைக்கும் வசதிகளைப் பற்றி மேன்மைப்படுத்திச் சொன்னதால், அந்தச் சந்நியாசியும் முள் படுக்கையை விட்டு எழுந்து எங்களுடன் ஓம்ரியின் வீட்டுக்குவந்து விட்டார். அவருடைய மனமாற்றத்தைக் கண்டு ஓம்ரி மிக மகிழ்ச்சியடைந்தவராய், அவருடைய உடம்பை முதலில் அழுக்குப் போகத் தேய்த்துக் குளிப்பாட்டச்செய்து நல்ல ஆடைகளைத் தந்து, வாசனைத் திரவியங்களைப் பூசச் செய்து, நல்ல உணவு கொடுத்து, சகல வசதிகளையும் செய்து தந்தார். அந்த மகானும் சாதாரண மனிதர்களைப் போல, நன்ருக வாழ்ந்தார்; எல்லோரிடமும் சமமாகப் பழகினர்; "முன்பிருந்ததைவிட இப்பொழுது இருப்பது ஆயிரம் பங்கு மேலான வாழ்க்கை என்று அவர் கூறினர்.

ஆனல் அவர் மகானயிருந்த சமயத்தில் அவருக்கிருந்த புகழ் இப்பொழுது இல்லாமற் போயிற்று. முன்பு இருந்ததைப் போல பெண்கள் அவரைச் சூழ்ந்து கொண்டு உபதேசங்கள் கேட்க வருவதில்லை. எனவே ஓம்ரியின் வீட்டில் இரண்டு வாரங்கள் தங்கியிருந்த பிறகு, அந்த மகான் பழையபடி தன் முள் படுக்கைக்கும், இரும்புச் சங்கிலிக்கும் போய்ச் சேர்ந்தார், பழைய புகழை மீண்டும் பெறுவதற்காக.

[வால்டேர் எழுதிய சிறுகதைகளில் இது ஒன்று. அவர் எழுதிய பெரும்பாலான கதைகளில் இந்தியா, பாரசீகம், அரேபியா, ஆப்ரிக்கா, தென் அமெரிக்கா இப்படி வேறு நாடுகளில் நிகழ்ந்தவைகளாகவே சம்பவங்கள் கூறப்பட்டன. எனினும் அவை அந்தக் காலத்து பிரான்ஸ் நாட்டின் நிலையுடன் ஒட்டியவைகளாக இருந்தன.

அந்தக் காலத்து ஐரோப்பாவிலும், உடலை வெறுத்து, உண்பதைக் குறைத்து, இரும்புச் சங்கிலிகளைப் போட்டுக்கொண்டு சதா தியானத்தில் ஈடுபட்டிருக்கும் மதக் குருமார்கள், சந்நியாசிகள் பலர் இருந்தனர். அவர்களுடைய வேத புத்தகமும், நம் நாட்டிலிருப்பதைப் போலவே, மக்களுக்குப் புரியாத லத்தீன் மொழியில் இருந்தது. ஏதாவது பாவம் செய்தால் அதற்குப் பரிகாரமாகப் போப்புக்கு பணம் செலுத்தினல் பாவமன்னிப்பு கிடைத்துவிடும் என்ற கருத்தும் பரவியிருந்தது. இங்கு இருப்பதைப் போன்று அங்கும் "உலகத்திலே ஆசை எதுவும் கூடாது, மோட்சத்தைப் பெறவே எல்லோரும் பாடுபடவேண்டும்'' என்ற உபதேசங்களும் இருந்தன. இந்தக் கதையில் வருவதைப் போல, அத்தகைய உபதேசங்களைக் கேட்கப் பெண்கள் ஏராளமாக வந்தனர். மகான்களின் வேஷத்தையும், அவர்களுடைய உபதேசங்களின் பயனற்ற தன்மையையும் வால்டேர் இந்தச் சிறுகதை மூலம் விளக்கினர்.

"வாழ்வாவது மாயம், மண்ணவது மெய்'' போன்ற உலுத்த வேதாந்தங்கள் இந்தியாவில் இருந்ததைப் போலவே ஐரோப்பாவிலும் பலமாக இருந்தன. வால்டேர் போன்றோர் ஆரம்பித்த அறிவுக்கிளர்ச்சிக்குப் பின், அதன் பயனகத் தோன்றிய பிரெஞ்சுப் புரட்சிக்குப் பின் அந்த மூடநம்பிக்கைகள் ஐரோப்பாவில் மங்கிவிட்டன. இந்தியாவில் மட்டும்தான் அந்த மூட நம்பிக்கைகள் இன்னும் இருக்கின்றன.]

— இரா. செழியன்

"மதங்கள் வளர்ந்ததைப் பற்றி எழுத வேண்டுமென்றல், ஆயிரக்கணக்கான புத்தகங்கள் எழுதப்படலாம், ஆனல் அந்தப் புத்தகங்கள் எல்லாவற்றையும் "அறியாமை, மயம்'' என்ற இரண்டே வார்த்தைகளுக்குள் அடக்கிவிடலாம். முதலில் ஆரம்பித்த சிறு நம்பிக்கைகள் மீது கட்டுக்கதைகளையும் தெய்வீக வரலாறுகளையும் முறைப்படி பின்னி அறிவுக்கு ஒத்தவை போல்த் தயாரித்தவர்கள், மற்றவர்களை விட அறியாமையிலும், பயத்திலும் ஆழ்ந்தவர்களாயிருந்தனர்.''

— வால்டேர்.

மனிதனின் விலைமதிப்பு ரூ. 40!



கொழுப்பு-ஏழு சோப்புக் கட்டிகளுக்கு உதவும்



கந்தகம்-100 கந்தக வில்லைகளுக்கு உதவும்

தண்ணீர்-10 காலன் பீப்பாவை நிரப்ப உதவும்



இரும்பு-இரண்டு அங்குல ஆணிக்கு உதவும்

சுண்ணும்பு-ஒரு சிறு அறையை வெள்ளை யடிக்க உதவும்



கரி-9000 எழுதுகோலின் கூர்களுக்கு உதவும்

மக்னீஷியம்-ஒரு கரண்டி உப்புக்கு உதவும்



பாஸ்பரஸ்-2200 தீக்குச்சிகளின் தலைகளுக்கு உதவும்

மனித உடலின் அமைப்பே ஒரு வியப்பூட்டும் ஆராய்ச்சி உலகமாகும்! மனித உடல் பல பொருள்களின் கூட்டுச் சேர்க்கையாகும்! பொருள்களை முறைப்படி அளவோடு கூட்டி மனித உடலை உருவாக்கும் தொழிலை இப்பொழுது இயற்கைதான் செய்து வருகிறது! அந்தத் தொழிலைச் செயற்கையால் இன்னும் செய்ய இயலவில்லை! விஞ்ஞானத்தின் உதவி கொண்டு அந்தத் தொழிலின் நுட்பத்தை ஆராய்ந்து அறிந்து கொண்டிருக்கும் முயற்சியிலேயேதான் செயற்கை ஈடுபட்டிருக்கிறது!

மனிதனது உடலைக் கூறுபடுத்தி, அதிலே சேர்ந்துள்ள பொருள்களைத் தனித்தனியே பிரித்தால் கொழுப்பு, கந்தகம், இரும்பு, கரி, பாஸ்பரஸ், மக்னீஷியம், உப்பு, சுண்ணும்பு, தண்ணீர் ஆகிய இவைகள்தாம் குறிப்பிடப்படும் பொருள்களாகக் கிடைக்கும். சுமார் 140 பவுண்டு எடையுள்ள மனிதனைக் கூறு போட்டுத் தனித்தனிப் பொருளாக எடுத்தால், எடுக்கப்படும் கொழுப்பிலிருந்து ஏழு சோப்புக் கட்டிகளையும், கந்தகத்திலிருந்து 100 கந்தக வில்லைகளையும், இரும்பிலிருந்து இரண்டு அங்குல ஆணியையும், கரியிலிருந்து 9000 எழுதுகோல் கூர்களையும், பாஸ்பரஸிலிருந்து 2200 நெருப்புக்குச்சித் தலைகளையும் மக்னீஷியத்திலிருந்து ஒரு கரண்டி உப்பையும், சுண்ணும்பிலிருந்து ஒரு சிறு அறையை வெள்ளையடிப்பதற்கான சாந்தையும், ஒரு பத்து காலன் பீப்பாவை நிரப்புவதற்கான தண்ணீரையும் பெறலாம். இவை எல்லாவற்றையும் விலை கூறினால் ஏறத்தாழ ரூ 40தான் பெறும்.

அறிவற்ற மரம் போன்ற மனிதனின் விலை ரூ. 40!

காதற் காட்சிகள்

★

ஒரு சிற்றூர். அவ்வூரை அடுத்து இளமரக்கா. அங்கே பூத்துக் குலுங்கி பொலிவு பரப்பி நிற்கும் பல மரங்கள். அவற்றின் ஊடே வளைந்து நெளிந்து ஓடிக்கொண்டிருக்கும் வாய்க்கால். அதன் நீரைத் தொட்டுக்கொண்டு நிற்கிறது ஞாழல் மரம்!

மலர்பூத்து மணத்தை அள்ளி வீசிக்கொண்டிருக்கும் ஞாழல் மரத்தை நோக்கி வருகிறாள், பெண்ணழகே உருவெடுத்து வந்தாற்போன்ற நங்கை ஒருசதி. ஞாழலின் பூக்களைக் கொத்துக் கொத்தாகக் கொய்கிறாள். அவற்றை மயிரோடு சேர்த்து முடிகிறாள். முடி இறுகி நிற்க மறுக்கிறது; குலைந்து குலைந்து வீழ்கிறது. அரைகுறையாக முடித்துக்கொண்டு அகமகிழ்வோடு திரும்புகிறாள். அவள் அசைந்து அசைந்து செல்ல, தலைமயிரும் குலைந்து, பூக்கொத்தோடு சரிந்து, தோளின் மீது விழுந்து, புரண்டுகொண்டிருக்கிறது. அவள் அகத்தின்கண் ஊறிஎழும் மகிழ்வு, அவள் முகத்தைப் பொலிவுறச்செய்கிறது!

நங்கை அன்னநடை நடந்து போகும் வழியில், நம்பி ஒருவன் எதிர்ப்படுகிறான். அவளது மதிமுகம் பார்க்கிறான்; மயங்கி நிற்கிறான். நிலவின் ஒளியைப் பார்க்கும்போது ஏற்படும் மகிழ்வுணர்ச்சி, அவளைப் பார்க்கப் பார்க்கப் பொங்கி எழுந்து அவன் உள்ளமெல்லாம் நனைக்கிறது. "இதுவரையில் கண்டறியாத பெண்ணழகியைக் காண்கிறேமே!....இவள் யாராக இருக்கக் கூடும்?"....என்று மதிமபக்கத்தோடு திவிளக்கமும் தேடுகிறான். "கொல்லி மலையின் கண்ணே, ஒப்பற்ற சிற்பி ஒருவனால், செதுக்கி வைக்கப்பட்ட பெண்பாவை ஒன்று, உண்டு என்று சொல்கிறார்களே!....அந்தப் பாவைதான் உயிர்பெற்றெழுந்து வந்துள்ளதோ? அல்லது நல்ல அழகுள்ள பெண்களது உறுப்புகளையெல்லாம் தனித் தனியாகக் கழற்றி, ஒருங்கு சேர்த்து, உயிரூட்டி இயற்கையால் அனுப்பப்பட்ட பெண்ணழகியோ? அல்லது ஆடவர் மேலுள்ள வெறுப்பாலே, அவர்களை வருத்துவதற்குத், தன்னை யாரென்று அறியாதபடி, மறைத்துப் பெண் வடிவங்கொண்டு வந்ததோர் கொல்லுந் தன்மையையுடைய கூற்றமோ?" என்று பலவாறாக எண்ணுகிறான். அவனை அப்படியெல்லாம் எண்ண வைக்கிறது அவளது அழகுத் தோற்றம். அவள் கொடிபோல் துவண்டு நடக்கிறாள்; எண்கோவையாகிய மேகலையை (ஒட்டியாணம்) இடுப்பில் அணிந்திருக்கிறாள்; பூப்போட்ட புடவையை உடுத்தியிருக்கிறாள். "இவற்றையெல்லாம் காணும்போது, இவள் ஒரு பெண்ணாகத்தான் இருக்க வேண்டும்; அதுவும் ஒரு செல்வந்தர் வீட்டைச் சேர்ந்தவளாக இருக்க வேண்டும்" என்ற முடிவுக்கு வருகிறான். ஆனால் அவளோ தனியாக நடந்து வருகிறாள். "இவள் வாழ்ந்து வீழ்ந்துபோன குடும்பத்தைச் சேர்ந்தவளாக இருக்கக் கூடும்; எனவே தான் துணையின்றித் தனியாக நடந்து வருகிறாள்" என்று தனக்குள்ளே அறுதியிட்டுக் கொள்கிறான்.

"இதுவரையில் இவளைக் காவல் காத்து வந்தவர்கள் இப்பொழுது காவல் காக்காமல், வெளியே, தனியே புறப்பட்டுப் போகும்படி விடுதல் கொடுமை! கொடுமை!" என்று தனக்குள்ளே சொல்லிக்கொள்கிறான்.

"இவளை மேலே போகவொட்டாமல் தடுத்து, இவளோடு பேச்சுக் கொடுத்து, இவளை யாரென்று அறிவேன்" என்று எண்ணமிட்டுக் கொண்டு, அவள் எதிரிலே போய் நிற்கிறான். அவள் திடுக்கிட்டு நாணமுற்று ஒதுங்குகிறாள்.
"பெண்ணே!..." என்று அவன் அன்போடு விளிக்கிறான்; அவள் திரும்பி நிமிர்ந்து பார்க்கிறாள்.

"அஞ்சாதே! நீ மிக்க நல்லவளல்லவா?..." என்று குழைந்து கூறுகிறான். அவன் மேற்கொண்டு என்ன சொல்லப் போகிறான் என்பதை எதிர்பார்த்து, அவள் தன் பார்வையை அவன் பக்கம் மெல்ல செலுத்தி நிற்கிறாள்.

"நான் கூறுவதைச் சற்றுக் கேள்! பெண்ணே!.." என்கிறான். அவள் அச்சமும் நாணமும், மருட்சியும் கலந்த பார்வையோடு அவனை மீறிப்போக இயலாமல் எதிர்நிற்கிறாள்.

"பெண்ணே! நீ மிகவும் நல்லவளாகக் காணப்படுகிறாய்! நீயோ மடப்பம் பொருந்திய

வளாகவும், மான் விழித்துநோக்குவதைப் போன்ற நோக்கத்தை உடையவளாகவும் இருக்கிறாய்! உன்னுடைய நடை, கொண்டை மயிரையுடைய அன்னத்தின் நடையைப் போன்றிருக்கிறது! உன்னுடைய சாயல், பெட்டையோடு சேர்ந்து உலாவும் மயிலின் நடை போன்றிருக்கிறது! உன்னுடைய மடப்பம், கல்லைத் தின்னும் புறுவின் மடப்பம் போன்றிருக்கிறது; இவ்வளவு நலன்களையும் ஒருங்கே பெற்றுக் காணப்படும் உன்னுடைய அழகு, உன்னைக் கண்டவர்களையெல்லாம் மயங்கி விழச் செய்கிறது என்ற நிலைமையை நீ அறிவாயோ? அறியாயோ? எனக்குத் தெரியவில்லை!..." என்று குறும்புத்தன்மையோடு நயந்து கூறுகிறான். அவள் அவனை முறைத்துப் பார்த்துவிட்டுக், கையசைவால் அவனை விலகச் சொல்லி, அவன் விலகாததால், அப்பால் தள்ளி விலகிச் செல்கிறாள். சில அடிகள் எடுத்து வைத்தவுடன், அந்த இளைஞனின் போக்கு கண்டு அவளுக்கே சிரிப்பு வந்துவிடுகிறது. கையால் வாயைப் பொத்திக்கொண்டு குனிந்த வண்ணம் புன்முறுவல் பூத்துக்கொண்டு போகிறாள்.

அதற்குள் அந்த ஆணழகன் அவள் முன்னே ஓடி வந்து, மீண்டும் வழிமறித்து நிற்கிறான். அவள் நிமிர்ந்து பார்க்கிறாள். அவள் புன்முறுவல் பூத்த நிலையில், அவள் பல்லழகையும், வாயைக் கையால் பொத்திக்கொண்டு நின்ற நிலையில், அவள் கையழகையும் அவனால் கண்டு கொள்ளமுடிகிறது. அவை, அவன் உள்ளத்தில் அப்படியே படிந்துவிடுகின்றன. அவள் வாய் பேசாமல், என்ன செய்வதென்று தெரியாமல் திகைத்து நிற்கிறாள்.

"பெண்ணே! நீ மிக்க நல்லவள்! வளைந்து காணப்படும் உனது முன்கை எவ்வளவு அழகாக இருக்கிறது தெரியுமா? ...அதுபோலவே உன்னுடைய வெள்ளிய பற்களும் மிக அழகாக இருக்கின்றன!—உன்னுடைய தோள்கள் நிறத்தாலும், திரட்சியாலும் மூங்கிலை ஒத்திருக்கின்றன; மென்மையால் மெல்லிய துணியால் மூடப்பட்ட பஞ்சணையை ஒத்திருக்கின்றன; காமக்கடலை நீந்துவதற்குத் துணையாக இருத்தலில், நீர்வெள்ளத்தைக்கடக்கும் தெப்பத்தை ஒத்திருக்கின்றன. இவற்றைக் கண்டவர்கள், இவற்றை அடைய வேண்டும் என்ற ஏக்கத்தால் மிக வருந்துகிறார்கள் என்னும் நிலைமையை நீ அறிவாயோ? அறியாயோ? தெரியவில்லை!..." என்று கூறுகிறான். அப்பெண் ணணங்கு ஏதும் பேசாமல் வழிவிடச் சொல்லிக்கையமைக்கிறாள். அவன் வழி விடுவதாக இல்லை மீண்டும் அப்பால் தள்ளிச் சென்று விலகிப் போகிறாள்.

அவளிடத்தில் இன்னமும் சில பேசவேண்டும்போல் அவனுக்குத் தோன்றுகிறது. மீண்டும் ஓடுகிறான், அவளை வழிமறித்து எதிர் நிற்கிறான். அவன் சொல்லுவதைக் கேட்டுக் கொண்டிருக்கவும் அவளால் இயலவில்லை; அவனைத் தட்டிக்கழித்துவிட்டுச் செல்லவும் முடியவில்லை. அந்த இளைஞன் அடுத்து அடுத்துக் கொடுக்கும் தொல்லை பொறுக்க மாட்டாமல், வேண்டா வெறுப்போடு நிற்கிறாள்.

"பெண்ணே! நீ மடப்பம் பொருந்திய நல்லவளாகவல்லவோ காணப்படுகிறாய்!...உன் முன்கையிலுள்ள மயிர், ஒழுங்குபட வரிவரியாக அமைந்து, எவ்வளவு அழகுடையதாகக் காணப்படுகிறது தெரியுமா?...உன்னுடைய பெருத்த இளமையையுடைய மார்பகங்கள் கோங்கை மரத்தினது இளைய மொட்டைப் போலவும், அடிப்பாகம் அறுத்துவிடப்பட்ட குரும்பையைப் போலவும், மழைத்துளி பட்டு உண்டான மொக்கைப் போலவும் அழகுறக் காட்சி யளிக்கின்றன; அவைகள் உன்னைப் பார்ப்பவர்களது உயிரை வாங்கும் தன்மையனவாக அமைந்திருக்கின்றன என்பதை நீ அறிவாயோ? அறியாயோ? தெரியவில்லை!..." என்று ஏங்கிக் கூறுகிறான்.

அவனுடைய கூற்று அவளது நாணத்தைத் தொடுகிறது. அவள் வெட்கி ஏதுங் கூற முடியாதவளாய், மதிமயக்கமுற்றவள் போலத் தாண்டிச் செல்ல முயலுகிறாள். "பெண்ணே! நீ பிறருடைய வருத்தத்தை அறிந்துகொள்ள மாட்டேனென்கிறாயே!... நீ மயக்க முற்றவள் போலப் போவது முறையா?...கேட்பதற்கு யாதொன்றுஞ் சொல்லாமல் போய்க் கொண்டே இருக்கிறாயே! பெண்ணே!..." என்றுகுழைந்து நின்று விளிக்கிறான் அவளோ அவன் கூற்றைப் பொருட்படுத்தாமல், மேற் சென்று கொண்டிருக்கிறாள்.

அவ் ஆணழகன் எதிர்பார்த்து ஏமாந்த நிலையில், அவள் காதில் விழும்படி சற்று உரக்கக் கூறுகிறான், "பெண்ணே!...நான் ஒன்று மட்டும் இப்பொழுது கூறுவேன்! உன் மீது ஏதே

னுங் குற்றம் உண்டா என்றால், இல்லை! உன்னை வீட்டுக்கு வெளியே புறப்பட விட்ட உன்னுடைய சுற்றத்தார் மீதாவது குற்றம் உண்டா என்றால், அதுவும் இல்லை! உள்ளபடியே குற்றம் யாருடையது என்றால், மதம் பிடித்த-கண்டாரைக் கொல்லுந் தன்மையுடைய யானையை நீர்த்துறைக்கு அனுப்பினால், அதைப் பறையறைந்து சொல்வதன் மூலம், எப்படி அந்தச் செய்தி முன் கூட்டியே மக்களுக்கு அறிவிக்கப் படுகிறதோ, அப்படிப் பறையறைந்து முன்னறிவிப்புச் செய்துவிட்டு, நீ வெளியே செல்ல வேண்டுமே யொழிய, பறையறையாமல் நீ வெளியே புறப்படக் கூடாது, என்று ஆணையிடாமலிருக்கிற அரசனே தவறுடையவன்!" என்கிறான்.

அவள் அதனைக் காதில் வாங்கிக் கொண்டதும்கொள்ளாததுமாக ஓடி மறைந்துவிடுகிறாள்!

* * *

கலித்தொகையில், **குறிஞ்சிக்கலியின் 20-வது** பாட்டிலுள்ள கருத்தே மேலே தீட்டிக் காட்டப்பட்டிருப்பதாகும். அழகுள்ள நங்கையொருத்தியை நம்பி ஒருவன் காண்கிறான்; காதல் கொள்கிறான்; அவள் காதலைத் திருப்பிச் செலுத்த இசையவில்லை; காதல் மயக்கங் கொண்ட இளைஞன் ஏதேதோ அவளைப் புகழுகிறான்; அவள் நாணம், அச்சம் காரணமாக வாய்பேசாமற் போய் விடுகிறாள்; ஏக்கவுணர்வோடு நிற்கிறான் இளைஞன்! இப்படிப் பட்ட காதல் நிகழ்ச்சியை அழகுடைய காதற் காட்சியாக ஆக்கிக் காட்டுபவர் **கபிலர்** ஆவார். ஒரு பெண் மிக்க அழகுடையவள்-கண்டாரைக் கவரும் தன்மையுடையவள் என்பதை, எவ்வளவு நயம்பட விளக்கிக் காட்டுகிறார் என்பது படித்துப் படித்து இன்புறுதற்குரியதாகும்.

* *

ஊர்க்கால் நிவந்த பொதும்பருள் நீர்க்கார்க்
கொழுநிழல் ஞாழல் முதிரிணர் கொண்டு
கழும முடித்துக் கண்கூடு கூழை
சுவன்மிசைத் தாதொடு தாழ வகன்மதி
தீங்கதிர் விட்டது போல முகனமர்ந்து
ஈங்கே வருவா ளிவள்யார்கொ லாங்கேயோர்
வல்லவன் தைஇய பாவைகொல் நல்லார்
உறுப்பெலாங் கொண்டியற்றி யாள்கொல் வெறுப்பினால்
வேண்டுருவங் கொண்டதோர் கூற்றங்கொ லாண்டார்
கடிதிவளைக் காவார் விடுதல் கொடியியற்
பல்கலைச் சில்பூங் கலிங்கத்த ளீங்கிதோர்
நல்கூர்ந்தார் செல்வ மகள்;
இவளைச், சொல்லாடிக் காண்பேன் தகைத்து;

நல்லாய் கேள்,

ஆய்தூவி யனமென அணிமயிற் பெடையெனத்
தூதுணம் புறவெனத் துதைந்தநின் னெழினலம்
மாதர்கொள் மானோக்கின் மடநல்லாய் நிற்கண்டார்ப்
பேதுறூஉ மென்பதை யறிதியோ அறியாயோ;

நுணங்கமைத் திரளென நுண்ணிழை யணையென
முழங்குநீர்ப் புணையென அமைந்தநின் தடமென்றோள்
வணங்கிறை வாலெயிற் றந்நல்லாய் நிற்கண்டார்க்கு
அணங்காகு மென்பதை யறிதியோ அறியாயோ;

முதிர்கோங்கின் முகையென முகஞ்செய்த குரும்பையெனப்
பெயல்துளி முகிழெனப் பெருத்தநின் னிளமுலை
மயிர்வார்ந்த வரிமுன்கை மடநல்லாய் நிற்கண்டார்
உயிர்வாங்கு மென்பதை யுணர்தியோ உணராயோ;

எனவாங்கு,

பேதுற்றாய் போலப் பிறரெவ்வம் நீயறியாய்
யாதொன்றும் வாய்வாளா திறந்தீவாய் கேளினி

நீயுந் தவறிலை நின்னைப் புறங்கடைப்
போதர விட்ட நுமருந் தவறிலர்
நிறையழி கொல்யானை நீர்க்குவிட் டாங்குப்
பறையறைந் தல்லது செல்லற்க வென்று
இறையே தவறுடை யான். [குறிஞ்சிக்கலி - 20]

[நிவந்த-வளர்ந்த; பொதும்பர்-இளமரக்கா; ஞாழல்-ஞாழல்மரம்; முதிரிணர்-முதிர்ந்த பூங்கொத்து; கண்கூடு கூழை-தலைக்கூடின மயிர்; தலைக்கூடலாவது ஒன்றுதல்; ஒரே கற்றையாய்ச் செறிந்த முடி; சுவல்மிசை-தோளின்மீது; அகன்மதி-நிறைந்த சந்திரன்; தைஇய-பண்ணப்பட்ட; பாவை-கொல்லிமலைப் பதுமை; கடிது-கொடிது; பல்கலை-எண்கோவையாகிய மேகலை; பூங்கலிங்கம்-பூப்போட்ட புடவை; ஈங்கு இது ஓர்-இந்நிலையை ஆராய்ந்து பாராய்; நல்கூர்ந்தார்-வறுமையில் தள்ளப்பட்டோர்; ஆய்தூவி-உச்சிக் கொண்டைமயிர்; அனம்-அன்னம்; தூதுணம்-கல்லை உணவாக உண்ணும்; துதைந்த-நெருங்கிய; பேதுறூஉம்-மயக்கமுறுத்தும்; நுணங்கமைத் திரள்-நுண்மையையுடைய மூங்கில்; இழையணை-துணியால் மூடப்பட்ட பஞ்சணை; புணை-தெப்பம்; வணங்கிறை-வலைந்த முன்கை; வாலெயிறு-வெள்ளிய பல்; அணங்காகும்-வருத்தமாகும்; பேதுற்றாய்-மயக்கமுற்றாய்; எவ்வம்-வருத்தம்; நுமர்-சுற்றத்தார்; நிறையழி-நிதானம் தவறிய; அதாவது மதம் பிடித்த; இறை-அரசன்.]

—இரா. நெ.

—●—

இரயில்வேக்களைப் பற்றி!

உலகில் நிற்காமல் நீண்ட தொலைவு ஓடும் புகைவண்டி:—“ப்ளையிங் ஸ்காட்ஸ்மேன்” (இங்கிலாந்து) 392 மைல்4 பர்லாங்.

உலகில் பெரிய இடத்தை அடைத்துக்கொண்டிருக்கும் கூட்ஸ் வண்டி நிலையம்:— பிரிஸ்டல்.

உலகில் மிக்கப் பரபரப்பு உள்ள புகைவண்டி சந்திப்பு:—கிளாப்ஹாம் (இங்கிலாந்து). நாள்ஒன்றுக்கு 2500 புகைவண்டிகள் சந்திக்கின்றன.

உலகில் மிகச் சிறிய சொந்த இருப்புப் பாதை:—வாட்டிகன்சிட்டி—போப்பாண்டவர் இருப்புப் பாதை—அரை மைல் நீளம்.

உலகில் மிகச் சிறிய பொது இருப்புப்பாதை:—ஈஸிங்வோல்டு (இங்கிலாந்து)- 2 மை. 4 பர்.

உலகில் மிகப் பெரிய பூமிக்குஅடி புகைவண்டி நிலையம்:—பெர்லின்- 9 வழிகளையும் 8 நகரும் படிக்கட்டுகளையும் கொண்டது.

உலகில் மிக நீண்ட இரயில்வே மலைக்குடைவு:—சிம்ப்ளான் (ஸ்விட்ஜர்லாந்து-இத்தாலி) - 12 மைலும் 560 அடி நீளமும் கொண்டது.

உலகில் மிகப் பெரிய இரயில்வேபாலம்:—கீழ் ஜாம்பெஸி (ஆப்ரிக்கா) - 12 064 அடி.

உலகில் மிக நீண்ட நேரான இருப்புப்பாதை:—ஆஸ்திரேலியாவிலுள்ள டிரான்ஸ் - காண்டினெண்டல் இரயில்வே-328 மைல் நேர் நீட்டம்.

உலகில் மிக உயரத்தில் இருக்கும் இரயில்வே:—அன்டோபகாஸ்டா - பொலிவியா இரயில்வே-15,843 அடி உயரத்தில் செல்கிறது.

உலகில் மிகப் பெரிய புகைவண்டி நிலையம்:—சோனேபூர் (இந்தியா) - 2415 அடி நீட்டம்,

உலகில் மிக உயரமான இரயில்வே பாலம்:—பேட்ஸ் வியாடக்ட் (பிரான்ஸ்) - 434 அடி உயரம்.

உலகில் மிக்க மைல்கள் அளவுள்ள இரயில்வே - அமெரிக்கா - 2,27,679 மைல்கள்.

வர்ணாச்சிரம வஞ்சகம்

புதிய ஆரம்பக் கல்வித் திட்டத்துக்கு ஆதரவு தேடும் பெரு முயற்சியில், சென்னை முதன் மந்திரி ஆச்சாரியார் ஈடுபட்டிருக்கிறார்.

திட்டத்தைக் கொண்டுவரும் பொழுதே, "பயன் தராத திட்டம்" எனப் பள்ளி ஆசிரியர்கள் தெரிவித்தனர்; "ஆகாத திட்டம்" எனக் கல்வி வல்லுநர்கள் அறிவுறுத்தினர்; அவற்றையெல்லாம் ஆச்சாரியார் கேட்பதாயில்லை.

கல்வித்துறையில் ஆதரவு இல்லையென்றாலும், அரசியல் கட்சிகளின் ஆதரவாவது இருக்கிறதா என்றால், அதுவும் கிடையாது. தமிழ்நாடு காங்கிரஸ் தலைவர் காமராஜர் புதிய திட்டத்தை ஒத்துக்கொள்ளவில்லை. திராவிட - திராவிட முன்னேற்றக் கழகங்கள் தங்களுடைய பலத்த எதிர்ப்பைத் தெரிவித்துள்ளன. கம்யூனிஸ்ட், சோஷியலிஸ்ட், உழைப்பாளர் முதலிய முக்கிய கட்சிகளும் தங்களுடைய கண்டனத்தை அறிவித்துள்ளன. இவற்றையெல்லாம் ஆச்சாரியார் பொருட்படுத்துவதாகத் தெரியவில்லை.

திட்டத்தை மிக அவசரமாக ஆச்சாரியார் அமுலுக்குக் கொண்டு வந்து விட்டார். அமுலுக்கு வந்த பிறகு அதற்குப் பெரும் எதிர்ப்புக் கிளம்புகிறது என்று கண்டதும், ஊர் ஊராகப் பிரசாரம் செய்யக் கிளம்பியிருக்கிறார். அவருக்குத் துணையாக, அவருடைய பத்திரிக்கைகள் பக்கம் பக்கமாக அவருடைய பிரசங்கங்களுக்கு விளம்பரம் தருகின்றன. நம்மை ஆளவந்திருக்கும் கவர்னர் பிரகாசா கூட, இந்தப் பிரசாரக் குழுவில் சேர்ந்து கொண்டு, தான் போகு மிடங்களிலெல்லாம் கல்வித்திட்டத்துக்கு ஆதரவு காண முயலுகிறார். அண்மையில் பேசிய ஒரு இடத்தில், "புதிய திட்டத்தில் சிறு குறைகள் இருக்கலாம். அவற்றைப் பொருட் படுத்தாது திட்டத்தை நடத்திக்காட்டப் பொதுமக்கள் ஆதரவு தரவேண்டும்" என இந்தப் பெரிய மனிதர் பிரகாசா கேட்டிருக்கிறார்.

கொள்ளிக் கட்டையை எடுத்துக்கொண்டு, கோமாளி ஒருவன் கூரைமேல் நின்று கூத்தாடுகிறான். வீட்டுக்காரர் அதைப் பார்த்துவிட்டு "ஏதோ சிறிய கொள்ளிக் கட்டை. பையன் விளையாட ஆசைப்படுகிறான். என்னதான் நடக்கிறது என்று பார்க்கலாம்" என்று கேட்டுக் கொள்வதைப் போல, ஆச்சாரியார் கொண்டுவரும் ஆபத்து நிறைந்த திட்டத்துக்குப் பரிந்துகொண்டு பேச, கவர்னர் முன் வந்திருக்கிறார்.

கோமாளியின் கொள்ளி கண்டு மாடிவீட்டுக்காரன் கவலைப்பட மாட்டான்; ஏதோ வேடிக்கை என்று ஓட்டு வீட்டுக்காரன் பார்ப்பான். கொள்ளிக்கட்டையின் தீயால் கூரைவீடுகளுக்குத்தான் ஆபத்து; அதனால் குடிசைகள்தான் அழியும். அதைப் போல ஆச்சாரியாரின் தீதான திட்டத்தால் ஏழை மக்களுக்குத்தான் ஆபத்து, குடிசை வாழ்வினர் கல்விதான் அழியும்.

தாம் கொண்டுவந்துள்ள திட்டத்தின் விவரங்களைப்பற்றி ஆச்சாரியார் பேசுகிறாரே யொழிய, ஏன் இந்தத் திட்டத்தைக் கொண்டு வந்தார், எதற்காகக் கொண்டுவந்தார் என்பதை அவர் விளக்கவில்லை. ஒரு திட்டத்தைக் கொண்டு வருவதற்கு முன், எந்தக் குறைகளை நீக்க இந்தத் திட்டம் வருகிறது, இந்தத் திட்டம் வந்தால் எவ்வளவு பலன் கிடைக்கும் என்று தெரிவிக்க வேண்டும். அதாவது திட்டம் என்றால் அதன் ஆரம்பம், அதன் பலன் இரண்டையும் தெளிவு படுத்த வேண்டும். ஆச்சாரியார் இதைச் செய்யவில்லை. காரணம் அவருக்குத் தெரியாது என்பதல்ல, மற்றவர்களுக்குத் தெரியக் கூடாது என்பதால். திட்டத்தில் சூது நிறைந்திருக்கிறது. அது வெளிப்படாமல் பாதுகாத்துத், திட்டத்தை நிறைவேற்ற ஆச்சாரியார் பாடுபடுகிறார்.

வர்ணாஸ்ரமத்தை நிலை நாட்ட, ஜாதி பேதங்களைக் காப்பாற்றப் புதிய திட்டம் கொண்டு வரப்பட்டிருக்கிறது. எனவேதான், வர்ணாஸ்ரமம் வளர்ந்தால் யாருக்கு வாழ்வு வளமாகுமோ ஜாதி பேதங்கள் காப்பாற்றப்பட்டால் யாருடைய வசதிகள் காப்பாற்றப்படுமோ, அவர்கள் தான் ஆச்சாரியார் திட்டத்தை வரவேற்கின்றனர் அவர்களுக்காகத்தான் ஆச்சா

முதிர்கோங்கின் முகையென முகஞ்செய்த குரும்பையெனப்
பெயல்துளி முகிழெனப் பெருத்தநின் னிளமுலை
மயிர்வார்ந்த வரிமுன்கை மடநல்லாய் நிற்கண்டார்
உயிர்வாங்கு மென்பதை யுணர்தியோ உணராயோ;

எனவாங்கு,

பேதுற்றாய் போலப் பிறரெவ்வம் நீயறியாய்
யாதொன்றும் வாய்வாளா திறந்தீவாய் கேளினி

நீயுந் தவறிலை நின்னைப் புறங்கடைப்
போதர விட்ட நுமருந் தவறிலர்
நிறையழி கொல்யானை நீர்க்குவிட் டாங்குப்
பறையறைந் தல்லது செல்லற்க வென்று
இறையே தவறுடை யான். [குறிஞ்சிக்கலி - 20]

[நீவந்த-வளர்ந்த; பொதும்பர்-இளமரக்கா ஞாழல்-ஞாழல்மரம்; முதிரிணர்-முதிர்ந்த பூங்கொத்து; கண்கூடு கூழை-தலைக்கூடின மயிர்; தலைக்கூடலாவது ஒன்றுதல்; ஒரே கற்றையாய்ச் செறிந்த முடி சுவல்மிசை-தோளின்மீது; அகன்மதி-நிறைந்த சந்திரன்; தைஇய-பண்ணப்பட்ட; பாவை-கொல்லிமலைப் பதுமை; கடிது-கொடிது; பல்கலை—எண்கோவையாகிய மேகலை; பூங்கலிங்கம்—பூப்போட்ட புடவை; ஈங்கு இது ஓர்-இந்நிலையை ஆராய்ந்து பாராய்; நல்கூர்ந்தார்—வறுமையில் தள்ளப்பட்டோர்; ஆய்தூவி—உச்சிக் கொண்டைமயிர்; அனம்—அன்னம்; தூதுணம்—கல்லை உணவாக உண்ணும்; துதைந்த—நெருங்கிய; பேதுறூஉம்—மயக்கமுறுத்தும்; நுணங்கமைத் திரள்—நுண்மையையுடைய மூங்கில்; இழையணை—துணியால் மூடப்பட்ட பஞ்சணை; புணை—தெப்பம்; வணங்கிறை—வலைந்த முன்கை; வால்எயிறு—வெள்ளிய பல்; அணங்காகும்—வருத்தமாகும் பேதுற்றாய்—மயக்கமுற்றாய் எவ்வம்—வருத்தம் நுமர்—சுற்றத்தார்; நிறையழி—நிதானம் தவறிய; அதாவது மதம் பிடித்த; இறை—அரசன்.]

—இரா. நெ.

—●—

இரயில்வேக்களைப் பற்றி!

உலகில் நிற்காமல் நீண்ட தொலைவு ஓடும் புகைவண்டி:—"ப்ளைலயிங் ஸ்காட்ஸ்மேன்" (இங்கிலாந்து) 392 மைல்4 பர்லாங்.

உலகில் பெரிய இடத்தை அடைத்துக்கொண்டிருக்கும் கூட்ஸ் வண்டி நிலையம்:— பிரிஸ்டல்.

உலகில் மிக்கப் பரபரப்பு உள்ள புகைவண்டி சந்திப்பு:—கிளாப்ஹம் (இங்கிலாந்து). நாள்ஒன்றுக்கு 2500 புகைவண்டிகள் சந்திக்கின்றன.

உலகில் மிகச் சிறிய சொந்த இருப்புப் பாதை:—வாட்டிகன்சிட்டி—போப்பாண்டவர் இருப்புப் பாதை—அரை மைல் நீளம்.

உலகில் மிகச் சிறிய பொது இருப்புப்பாதை:—ஈஸிங்வோல்டு (இங்கிலாந்து)- 2 மை. 4 பர்.

உலகில் மிகப் பெரிய பூமிக்குஅடி புகைவண்டி நிலையம்:—பெர்லின்- 9 வழிகளேயும் 8 நகரும் படிக்கட்டுகளையும் கொண்டது.

உலகில் மிக நீண்ட இரயில்வே மலைக்குடைவு:—சிம்ப்ளான் (ஸ்விட்ஜர்லாந்து-இத்தாலி) - 12 மைலும் 560 அடி நீளமும் கொண்டது.

உலகில் மிகப் பெரிய இரயில்வேபாலம்:—கீழ் ஜாம்பெவி (ஆப்ரிக்கா) - 12 064 அடி.

உலகில் மிக நீண்ட நேரான இருப்புப்பாதை:—ஆஸ்திரேலியாவிலுள்ள டிரான்ஸ் - காண்டினெண்டல் இரயில்வே-328 மைல் நேர் நீட்டம்.

உலகில் மிக உயரத்தில் இருக்கும் இரயில்வே:—அன்டோபகாஸ்டா - பொலிவியா இரயில்வே-15,843 அடி உயரத்தில் செல்கிறது.

உலகில் மிகப் பெரிய புகைவண்டி நிலையம்:—சோனேபூர் (இந்தியா) - 2415 அடி நீட்டம்,

உலகில் மிக உயரமான இரயில்வே பாலம்:—பேட்ஸ் வியாடக்ட் (பிரான்ஸ்) - 434 அடி உயரம்.

உலகில் மிக்க மைல்கள் அளவுள்ள இரயில்வே - அமெரிக்கா - 2,27,679 மைல்கள்.

வர்ணாச்சிரம வஞ்சகம்

புதிய ஆரம்பக் கல்வித் திட்டத்துக்கு ஆதரவு தேடும் பெரு முயற்சியில், சென்னை முதன் மந்திரி ஆச்சாரியார் ஈடுபட்டிருக்கிறார்.

திட்டத்தைக் கொண்டுவரும் பொழுதே, "பயன் தராத திட்டம்" எனப் பள்ளி ஆசிரியர்கள் தெரிவித்தனர்; "ஆகாத திட்டம்" எனக் கல்வி வல்லுநர்கள் அறிவுறுத்தினர்; அவற்றையெல்லாம் ஆச்சாரியார் கேட்பதாயில்லை.

கல்வித்துறையில் ஆதரவு இல்லையென்றாலும், அரசியல் கட்சிகளின் ஆதரவாவது இருக்கிறதா என்றால், அதுவும் கிடையாது. தமிழ்நாடு காங்கிரஸ் தலைவர் காமராஜர் புதிய திட்டத்தை ஒத்துக்கொள்ளவில்லை. திராவிட-திராவிட முன்னேற்றக் கழகங்கள் தங்களுடைய பலத்த எதிர்ப்பைத் தெரிவித்துள்ளன. கம்யூனிஸ்ட், சோஷியலிஸ்ட், உழைப்பாளர் முதலிய முக்கிய கட்சிகளும் தங்களுடைய கண்டனத்தை அறிவித்துள்ளன. இவற்றையெல்லாம் ஆச்சாரியார் பொருட்படுத்துவதாகத் தெரியவில்லை.

திட்டத்தை மிக அவசரமாக ஆச்சாரியார் அமுலுக்குக் கொண்டு வந்து விட்டார். அமுலுக்கு வந்த பிறகு அதற்குப் பெரும் எதிர்ப்புக் கிளம்புகிறது என்று கண்டதும், ஊர் ஊராகப் பிரசாரம் செய்யக் கிளம்பியிருக்கிறார். அவருக்குத் துணையாக, அவருடைய பத்திரிக்கைகள் பக்கம் பக்கமாக அவருடைய பிரசங்கங்களுக்கு விளம்பரந் தருகின்றன. நம்மை ஆள வந்திருக்கும் கவர்னர் பிரகாசா கூட, இந்தப் பிரசாரக் குழுவில் சேர்ந்து கொண்டு, தான் போகுமிடங்களிலெல்லாம் கல்வித்திட்டத்துக்கு ஆதரவு காண முயலுகிறார். அண்மையில் பேசிய ஒரு இடத்தில், "புதிய திட்டத்தில் சிறு குறைகள் இருக்கலாம். அவற்றைப் பொருட் படுத்தாது திட்டத்தை நடத்திக்காட்டப் பொதுமக்கள் ஆதரவு தரவேண்டும்" என இந்தப் பெரிய மனிதர் பிரகாசா கேட்டிருக்கிறார்.

கொள்ளிக் கட்டையை எடுத்துக்கொண்டு, கோமாளி ஒருவன் கூரைமேல் நின்று கூத்தாடுகிறான். வீட்டுக்காரர் அதைப் பார்த்துவிட்டு "ஏதோ சிறிய கொள்ளிக் கட்டை. பையன் விளையாட ஆசைப்படுகிறான். என்னதான் நடக்கிறது என்று பார்க்கலாம்" என்று கேட்டுக் கொள்வதைப் போல, ஆச்சாரியார் கொண்டுவரும் ஆபத்து நிறைந்த திட்டத்துக்குப் பரிந்துகொண்டு பேச, கவர்னர் முன் வந்திருக்கிறார்.

கோமாளியின் கொள்ளி கண்டு மாடிவிட்டுக்காரன் கவலைப்பட மாட்டான்; ஏதோ வேடிக்கை என்று ஓட்டு வீட்டுக்காரன் பார்ப்பான். கொள்ளிக்கட்டையின் தீயால் கூரைவீடுகளுக்குத்தான் ஆபத்து; அதனால் குடிசைகள்தான் அழியும். அதைப் போல ஆச்சாரியாரின் தீதான திட்டத்தால் ஏழை மக்களுக்குத்தான் ஆபத்து, குடிசை வாழ்வினர்கல்விதான் அழியும்.

தாம் கொண்டுவந்துள்ள திட்டத்தின் விவரங்களைப்பற்றி ஆச்சாரியார் பேசுகிறாரே யொழிய, ஏன் இந்தத் திட்டத்தைக் கொண்டு வந்தார், எதற்காகக் கொண்டுவந்தார் என்பதை அவர் விளக்கவில்லை. ஒரு திட்டத்தைக் கொண்டு வருவதற்கு முன், எந்தக் குறைகளை நீக்க இந்தத் திட்டம் வருகிறது, இந்தத் திட்டம் வந்தால் எவ்வளவு பலன் கிடைக்கும் என்று தெரிவிக்க வேண்டும். அதாவது திட்டம் என்றால் அதன் ஆரம்பம், அதன் பலன் இரண்டையும் தெளிவு படுத்த வேண்டும். ஆச்சாரியார் இதைச் செய்யவில்லை. காரணம் அவருக்குத் தெரியாது என்பதல்ல, மற்றவர்களுக்குத் தெரியக் கூடாது என்பதால். திட்டத்தில் சூது நிறைந்திருக்கிறது. அது வெளிப்படாமல் பாதுகாத்துத், திட்டத்தை நிறைவேற்ற ஆச்சாரியார் பாடுபடுகிறார்.

வர்ணாஸ்ரமத்தை நிலை நாட்ட, ஜாதி பேதங்களைக் காப்பாற்றப் புதிய திட்டம் கொண்டு வரப்பட்டிருக்கிறது. எனவேதான், வர்ணாஸ்ரமம் வளர்ந்தால் யாருக்கு வாழ்வு வளமாகுமோ ஜாதி பேதங்கள் காப்பாற்றப்பட்டால் யாருடைய வசதிகள் காப்பாற்றப்படுமோ, அவர்கள்தான் ஆச்சாரியார் திட்டத்தை வரவேற்கின்றனர் அவர்களுக்காகத்தான் ஆச்சா

ரியாரும் தன் திட்டத்தைக் கொண்டுவந்திருக்கிறார்.

குலத்தொழில் முறை வர்ணாஸ்ரமத்தின் அடிப்படை. வர்ணாஸ்ரமத்தில் பார்ப்பனர் தவிர மற்றவர்கள் தொழில் புரிந்து வாழ வேண்டும், பார்ப்பனருக்குப் படிப்பது தவிர வேறு முக்கியமான வேலை கிடையாது. எனவே வர்ணாஸ்ரம தர்மத்தை அடிப்படையாகக் கொண்ட சமூகத்தில் பார்ப்பனர்கள் கல்வியறிவில் மேம்பாடடைந்திருந்தனர். வர்ணாஸ்ரம ஏற்பாடு தளர்ந்து, குலத்தொழில் முறை மாறுபட்டதால், மற்றவர்களும் கல்வி கற்கும் வாய்ப்பு, பார்ப்பனரல்லதாருக்கும் ஏற்பட்டது. இதனால் பார்ப்பனரல்லாதாரில் சிலர் கல்வி கற்றுப் பார்ப்பனருக்குப் போட்டியாகவரும் நிலை உண்டானது. பார்ப்பனர்-பார்ப்பனரல்லதார் பிரச்சனைகள் கல்வித் துறையிலும், உத்தியோகத் துறையிலும், அதன் அடிப்படையில் சமுகத்துறையிலும் ஏற்பட்டன. இந்த நிலையை மாற்றி, வர்ணாஸ்ரமத்தைப் புதுப்பித்துப் பழையபடி பார்ப்பனர்களின் ஏக போக உரிமைகளை மீண்டும் பெறவே ஆச்சாரியாரின் புதிய திட்டம் வந்திருக்கிறது.

திராவிட முன்னேற்றக் கழகம், அரக்கோணம் பொதுக்குழுவில் வெளியிட்ட தீர்மானத்தில், "பார்ப்பனரல்லாத சிறுவர்களை அறிவுச் சூன்யர்களாக்கவும். ஜாதி ஆணவத்தை ஊட்டி சமுதாயத்தைக் கெடுக்கும் வர்ணாசிரமத்தைப் புதுப்பிக்கவுமே" இந்தத்திட்டம் புகுத்தப்பட்டுள்ளது என்று தெளிவாகச் சுட்டிக் காட்டப்பட்டிருக்கிறது.

"புதிய ஆரம்பக் கல்வித் திட்டம் ஜாதிப் பாகுபாடுகளை வளர்ப்பதாகும்" என்று காங்கிரஸ் அன்பரும் சென்னை மேயருமான செங்கல்வராயன் அவர்களும் தெரிவித்துள்ளார். ஜாதி முறைகளின்படி புதிய கல்வித் திட்டம் எப்படியிருக்கும் என்று பார்ப்பதற்கு முன், இப்பொழுதுள்ள கல்வி வளர்ச்சி ஜாதி முறைகளின்படி எப்படி யிருக்கிறது என்பதைக் கவனிக்கலாம்.

கல்வி முறையில் ஆரம்பக் கல்வியானது 1-வது வகுப்பிலிருந்து 5-வது வரை சொல்லிக் கொடுக்கப்படுகிறது. அதற்கு மேற்கொண்டு ஆறு வகுப்புகள், அதாவது எஸ். எஸ். எல். சி. வரை கிடைக்கும் படிப்பு, உயர்நிலை அல்லது செகண்டரி கல்வியாகும். உயர்நிலைப் பள்ளிகளுக்கு மேல் கல்லூரிகள் வருகின்றன. கல்லூரிகளில், இண்டர், பி. ஏ., எம். ஏ. இவைகளுக்கானக் கலைக் கல்லூரிகளும், என்ஜினியரிங், மெடிகல் போன்ற தொழிற் கல்லூரிகளும் இருக்கின்றன. இவற்றையல்லாமல் வேறு தனிப்பட்ட துறைகளில் பயிற்றுவிக்கும் தனிப்பட்ட பள்ளிக்கூடங்களும், கல்லூரிகளும் இருக்கின்றன. நம் நாட்டிலுள்ள கல்வி நிலையங்களை, ஆரம்பப்பள்ளி, உயர்நிலைப்பள்ளி, தனிப்பட்ட பள்ளி, கலைக்கல்லூரி, தொழிற் கல்லூரி, தனிப்பட்ட துறைகளுக்கான கல்லூரி என ஆறு பெரும் பிரிவுகளாகப் பிரிக்க

சாதிப் பிரிவுகளின்படி

	பார்ப்பனர்கள்	பார்ப்பனரல்லாத இந்துக்கள்	தாழ்த்தப் பட்டோர்
ஆரம்பப் பள்ளியில்	2,10,025	25,50,135	4,89,828
உயர்நிலைப் பள்ளியில்	1,23,278	3,36,149	31,600
தனிப்பட்ட பள்ளிகளில்	15,162	35,570	6,394
கலைக்கல்லூரியில்	15,459	18,612	741
தொழிற்கல்லூரியில்	2,868	2,609	172
தனிப்பட்டக் கல்லூரியில்	741	439	15

லாம். இந்த ஆறு நிலைகளிலும் பார்ப்பனர்களும் பார்ப்பனரல்லாத மற்றவர்களும் அடைந்துள்ள மாணவர்கள் எண்ணிக்கையைக் கீழே கண்ட அட்டவணையில் காணலாம்.

(இந்த விவரங்கள் 1951ல் வெளியிடப்பட்ட சென்னை சர்க்கார் கல்வி இலாக்கா அறிக்கைகளிலிருந்து சேர்க்கப்பட்டன. மாணவர்களின் தொகை ஆண், பெண் இரு பாலாரையும் உட்படுத்திக் கொடுக்கப்பட்டிருக்கிறது.)

அட்டவணையில் கொடுக்கப்பட்டுள்ள புள்ளி விவரங்களைப் பார்க்கும்பொழுது, கல்வி நிலை உயர, உயர கல்வி பெறுவோரில் பார்ப்பனர் அதிகமாகிக் கொண்டே போகின்றனர், என்பது விளங்கும்.

ஆரம்பப் பள்ளிகளில் மொத்தம் 40 லட்சம் மாணவர்கள் இருக்கின்றனர். அதில் 2 லட்சம் மாணவர்கள் தாம் பார்ப்பனர்கள். மற்ற 38 லட்சம் பார்ப்பனரல்லாதவர்கள்.

அடுத்த உயர்நிலைப்பள்ளியில் பார்த்தால் மொத்த மாணவர்கள் 5 லட்சத்துக்குச் சற்றுக்குறைவு. அதில் 1 லட்சத்து 23 ஆயிரம் பேர்கள் பார்ப்பன மாணவர்கள். மீதியிருக்கும் 4 லட்சத்து 74 ஆயிரம் பேர் பார்ப்பனர் தவிர்த்த மற்றவர்கள்.

ஆரம்பப் பள்ளியில் இருந்த 38 லட்சம் பார்ப்பனரல்லாத மாணவர்களில் உயர்நிலைப் பள்ளியில் 4 லட்சத்து 75 ஆயிரம் பேர்கள் தான் இருக்க முடிந்தது. அதாவது எட்டில் ஒரு பங்கினர்தாம் ஆரம்பப் பள்ளியைத் தாண்டி, மேலே உயர்நிலைக் கல்வியை அடைய முடிகிறது. மீதி ஏழு பேரும், பள்ளிக்கூடங்களை விட்டு தம் குடும்பத்தினரோடு சேர்ந்து வேலை செய்து பிழைக்க வேண்டி, சென்று விடுகிறார்கள். ஆச்சாரியார் திட்டப்படி, ஆரம்பப்பள்ளி நிலையிலே அவர்கள் வேலை செய்யக் கட்டாயப் படுத்தப்படுவார்கள்.

அட்டவணையில் கொடுக்கப்பட்டுள்ள மாணவர்கள் எண்ணிக்கை ஆண், பெண் இரு பாலரும் சேர்ந்தே கணக்கிடப்பட்டிருக்கிறது. நம் நாட்டில் பெண் கல்வி போற்றப்படாத காரணத்தால், ஆண் மக்களின் கல்வியில் ஒவ்வொரு குடும்பத்தினரும் காட்டும் அக்கறையைப் பெண் மக்களின் கல்வியில் காட்டுவதில்லை. எத்தகைய வசதியும் இல்லையென்றால்தான் ஒரு குடும்பத்தில் மகன் பள்ளிக்கூடத்துக்கு அனுப்பப்படாமல் இருப்பான். வசதிகள் இருந்தால்கூடப் பெண் கல்வியின் அவசியம் உணராததால் பெண்களில் பெரும்பாலோர் பள்ளிக் கூடங்களுக்கு அனுப்பப்படுவதில்லை. பெண் கல்வி பொருளாதார வசதியுடன் மட்டுமல்ல, சமூகச் சூழ்நிலை, மனப்பான்மை, பழக்க வழக்கங்கள் இவைகளுடனும் இணைந்து இருக்கிறது.

எனவே ஆரம்பப் பள்ளியிலும், உயர் நிலைப் பள்ளியிலும் படிக்கும் மாணவர்களில் பெண்களின் தொகையை நீக்கி விட்டு, ஆண்களின்

மாணவர்களின் எண்ணிக்கை

கிருஸ்தவர்கள்	முஸ்லீம்கள்	மற்றவர்கள்	மொத்த மாணவர்கள் எண்ணிக்கை
2,97,170	3,95,317	67,714	40,10,189
58,928	31,081	16,218	5,97,254
13,340	3,242	2,009	75,717
4,864	1,554	297	41,527
954	512	149	7,264
141	58	4	1,398

தையற்கலை

கே. பி. சுந்தரம் G. C. T., T. T. C.

2

தையற்கலை அழகுக் கலையின் ஒரு சிறந்த பிரிவாகும். அழகையும், அதனால் ஏற்படும் இன்பத்தையும் தேடித்தேடி மனித குலம் ஓயாது அலைந்து கொண்டிருக்கிறது. அழகைக் காணு மிடங்களிலெல்லாம் மதிமயங்கி நின்று, மன மகிழ்ச்சிப்பெற்று, இன்பக் கடலில் திளைக்கிறது. அழகைக் காணாத இடங்களில் அழகைக்காண, தன் அறிவு, ஆற்றல், ஆண்மை, திறம் அனைத்தையும் மனிதகுலம் பயன்படுத்துகிறது; எதிர்பார்க்கும் அழகைக் காணுகிறது; மகிழ்கிறது!

மக்களின் தோற்ற வடிவில் அழகைக் கூட்டிக் கூட்டி, அவர்களை இன்பபுரிக்கு அழைத்துச் செல்ல, தையற்கலை பெரிதும் பாடுபடுகின்றது. தையல் தொழிலில் ஈடுபட்டிருப்பவன் வெறும் தொழில் வினைஞனாக மட்டும், இருந்துவிட்டால் போதாது; அவன் சிறந்த கலைஞனாகவும் இருந்து தீரவேண்டியவனாகிறான். கை கால்களை மட்டும் பயன்படுத்தி வேலை செய்பவன் வேலைக்காரன் என்று பெயர் பெறுகிறான். கை கால்களோடு மூளையையும் பயன்படுத்துபவன் தொழில் வினைஞன் என்று அழைக்கப்படுகிறான். கைகால் - மூளையோடு உள்ளத்தையும் பயன்படுத்துபவன் கலைஞன் என்று போற்றப்படுகிறான். தையற் கலைஞன் உள்ள உணர்வையும், அறிவுத் தெளிவையும், கைத்திறனையும் ஒன்று சேர்த்துக் குழைத்து, ஆடைகளில் அழகைக் கூட்டுகிறான்.

வண்ணப் படங்களைத் தீட்டும் ஓவியன், அழகுச் சிலைகளை வடிக்கும் சிற்பி ஆகியோர்க்கு எவ்வளவு கலையுள்ளம் தேவைப்படுகிறதோ, அவ்வளவு தையற் கலைஞனுக்கும் தேவைப்படுகிறது. ஓவியனும், சிற்பியும் உடற் கூறுபாடுகளையும், உறுப்புகளின் அளவுகளையும் நன்கு அறிந்திருந்தால்தான் அழகான ஓவியங்களையும், சிற்பங்களையும் ஆக்க முடியும். இருக்கும் ஒரு மனிதனை அப்படியே ஓவியத்தில் தீட்டியோ, சிற்பத்தில் செதுக்கியோ காட்டிவிட்டால் அது சிறந்த ஓவியமாகவோ, சிற்பமாகவோ ஆகிவிடும். ஆனால் தையற்கலைஞன், இருக்கும் ஒரு மனிதனுடைய அழகை இன்னும் எவ்வளவு கூட்டலாம் என்பதிலே கவனம் செலுத்தி, அதற்கேற்றாற் போன்ற உடுப்புகளை உருவாக்கித் தரவேண்டியவனாக இருக்கிறான். ஓவியனைப் போலவோ, சிற்பியைப் போலவோ தையற் கலைஞன் பொதுப் படையாக இருந்துவிட முடியாது; ஒவ்வொரு தனிப்பட்டவர்களின் உடலமைப்பு, உறுப்புகளமைப்பு, கைகால் அசைவு, நிறம், பொதுத் தோற்றம் இவையெல்லாவற்றையும் ஆராய்ந்தறிந்து அவரவர்க்கேற்ற உடுப்புகளை அழகு தரும் வண்ணம் ஆக்கிட வேண்டியவனாக இருக்கிறான். இக் கருத்து பற்றிதான் புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் அவர்கள் **"இயற்கையில் அழகிலார் எனினும் அவர்க்கெலாம், செயற்கை அழகுசெயும் தையற் றொழில்"** என்று கூறினார்.

ஆரம்பத்தில் இயற்கை நிலையிலிருந்த தன்னைக் காத்துக் கொள்ள, குளிரைத் தடுக்க, வெய்யலைத் தாங்கிக் கொள்ள, மனிதனுக்கு உடை தேவைப்பட்டது. அதற்குப் பின் அந்த உடையில் மனிதன் வசதியைத் தேடிக் கொள்ள ஆரம்பித்தான். உடை மென்மையானதாகவும், சுலபத்தில் மடிக்கக் கூடியதாகவும், நீண்ட நாட்களுக்கு வரக்கூடியதாகவும், ஆயிற்று. தேவையும் வசதியும் கிடைத்தபின் அந்த உடையில் அழகு தோன்றச் செய்தான். உடையில் பலவகை வண்ண வேலைப்பாடுகள், பூ வேலைகள் இவைகள் பெருகின; பிறர் கண்டு போற்ற வேண்டும் என்ற எண்ணம் அதிகரித்ததும், மேம்பாடுடையவன் பளபளக்கும் ஆடைகள், அவற்றில் பாய்ந்தோடும் தங்கக் கம்பிகள், இவைகளைச் சேர்த்தான். இதனால் அழகு உடை, ஆடம்பர உடைக்கு இடம் தந்தது. இப்படியாக உடை காலத்திற்கு காலம், பின் இடத்திற்கு இடம் மாறுபாடு அடைந்து கொண்டே போனது. உடை அமைப்பு மாறுவதற்கு உறுதுணையாக இருந்தது தையல் தொழில். தையல் தொழில் வளர்ச்சி அடைய, அடைய உடை அமைப்பு வேகமாக மாறிக்கொண்டே வந்தது. பண்டைக் காலத்தில் ஒரு நூற்றாண்டில் ஏற்பட்ட உடை மாறுதல், இன்று ஒரு மாதத்தில், அல்லது ஒரு வாரத்தில் ஏற்பட்டு விடுகிறது, தையற்கலை அடைந்துள்ள வளர்ச்சியால்.

தையற்கலை

கே. பி. சுந்தரம் G. C. T., T. T. C.

2

தையற்கலை அழகுக் கலையின் ஒரு சிறந்த பிரிவாகும். அழகையும், அதனால் ஏற்படும் இன்பத்தையும் தேடித்தேடி மனித குலம் ஓயாது அலைந்து கொண்டிருக்கிறது. அழகைக் காணுமிடங்களிலெல்லாம் மதிமயங்கி நின்று, மன மகிழ்ச்சிப்பெற்று, இன்பக் கடலில் திளைக்கிறது. அழகைக் காணாத இடங்களில் அழகைக்காண, தன் அறிவு, ஆற்றல், ஆண்மை, திறம் அனைத்தையும் மனிதகுலம் பயன்படுத்துகிறது; எதிர்பார்க்கும் அழகைக் காணுகிறது; மகிழ்கிறது!

மக்களின் தோற்ற வடிவில் அழகைக் கூட்டிக் கூட்டி, அவர்களை இன்பபுரிக்கு அழைத்துச் செல்ல, தையற்கலை பெரிதும் பாடுபடுகின்றது. தையல் தொழிலில் ஈடுபட்டிருப்பவன் வெறும் தொழில் வினைஞனாக மட்டும், இருந்துவிட்டால் போதாது; அவன் சிறந்த கலைஞனாகவும் இருந்து தீரவேண்டியவனாகிறான். கை கால்களை மட்டும் பயன்படுத்தி வேலை செய்பவன் வேலைக்காரன் என்று பெயர் பெறுகிறான். கை கால்களோடு மூளையையும் பயன்படுத்துபவன் தொழில் வினைஞன் என்று அழைக்கப்படுகிறான். கைகால் - மூளையோடு உள்ளத்தையும் பயன்படுத்துபவன் கலைஞன் என்று போற்றப்படுகிறான். தையற் கலைஞன் உள்ள உணர்வையும், அறிவுத் தெளிவையும், கைத்திறனையும் ஒன்று சேர்த்துக் குழைத்து, ஆடைகளில் அழகைக் கூட்டுகிறான்.

வண்ணப் படங்களைத் தீட்டும் ஓவியன், அழகுச் சிலைகளை வடிக்கும் சிற்பி ஆகியோர்க்கு எவ்வளவு கலையுள்ளம் தேவைப்படுகிறதோ, அவ்வளவு தையற் கலைஞனுக்கும் தேவைப்படுகிறது. ஓவியனும், சிற்பியும் உடற் கூறுபாடுகளையும், உறுப்புகளின் அளவுகளையும் நன்கு அறிந்திருந்தால்தான் அழகான ஓவியங்களையும், சிற்பங்களையும் ஆக்க முடியும். இருக்கும் ஒரு மனிதனை அப்படியே ஓவியத்தில் தீட்டியோ, சிற்பத்தில் செதுக்கியோ காட்டிவிட்டால் அது சிறந்த ஓவியமாகவோ, சிற்பமாகவோ ஆகிவிடும். ஆனால் தையற்கலைஞன், இருக்கும் ஒரு மனிதனுடைய அழகை இன்னும் எவ்வளவு கூட்டலாம் என்பதிலே கவனம் செலுத்தி, அதற்கேற்றாற் போன்ற உடுப்புகளை உருவாக்கித் தர வேண்டியவனாக இருக்கிறான். ஓவியனைப் போலவோ, சிற்பியைப் போலவோ தையற் கலைஞன் பொதுப் படையாக இருந்துவிட முடியாது; ஒவ்வொரு தனிப்பட்டவர்களின் உடலமைப்பு, உறுப்புகளமைப்பு, கைகால் அசைவு, நிறம், பொதுத் தோற்றம் இவையெல்லாவற்றையும் ஆராய்ந்தறிந்து அவரவர்க்கேற்ற உடுப்புகளை அழகு தரும் வண்ணம் ஆக்கிட வேண்டியவனாக இருக்கிறான். இக் கருத்து பற்றிதான் புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் அவர்கள் "**இயற்கையில் அழகிலார் எனினும் அவர்க்கெலாம், செயற்கை அழகுசெயும் தையற் றொழில்**" என்று கூறினர்.

ஆரம்பத்தில் இயற்கை நிலையிலிருந்து தன்னைக் காத்துக் கொள்ள, குளிரைத் தடுக்க, வெய்யிலைத் தாங்கிக் கொள்ள, மனிதனுக்கு உடை தேவைப்பட்டது. அதற்குப் பின் அந்த உடையில் மனிதன் வசதியைத் தேடிக் கொள்ள ஆரம்பித்தான். உடை மென்மையானதாகவும், சுலபத்தில் மடிக்கக் கூடியதாகவும், நீண்ட நாட்களுக்கு வரக்கூடியதாகவும், ஆயிற்று. தேவையும் வசதியும் கிடைத்தபின் அந்த உடையில் அழகு தோன்றச் செய்தான். உடையில் பலவகை வண்ண வேலைப்பாடுகள், பூ வேலைகள் இவைகள் பெருகின; பிறர் கண்டு போற்ற வேண்டும் என்ற எண்ணம் அதிகரித்ததும், மேம்பாடுடையவன் பளபளக்கும் ஆடைகள், அவற்றில் பாய்ந்தோடும் தங்கக் கம்பிகள், இவைகளைச் சேர்த்தான். இதனால் அழகு உடை, ஆடம்பர உடைக்கு இடந் தந்தது. இப்படியாக உடை காலத்திற்கு காலம், பின் இடத்திற்கு இடம் மாறுபாடு அடைந்து கொண்டே போனது. உடை அமைப்பு மாறுவதற்கு உறுதுணையாக இருந்தது தையல் தொழில். தையல் தொழில் வளர்ச்சி அடைய, அடைய உடை அமைப்பு வேகமாக மாறிக்கொண்டே வந்தது. பண்டைக் காலத்தில் ஒரு நூற்றாண்டில் ஏற்பட்ட உடை மாறுதல், இன்று ஒரு மாதத்தில், அல்லது ஒரு வாரத்தில் ஏற்பட்டு விடுகிறது, தையற்கலை அடைந்துள்ள வளர்ச்சியால்.

Regd. No. M 6296

பிரெஞ்சு நாட்டில்

அடக்குமுறைத் தாண்டவமாடியபொழுது



மக்கள் எழுந்தனர்! ☆ வெற்றி கண்டனர்!



☆

Edited, Printed and Published by V. R. NEDUNCHEZHIYAN M. A.,
at MANRAM ACHAKAM at 26, Nainiappan St, Mannadi, MADRAS-1.